

356 / 2-61

சிந்தனைக் குழுவின்

கல்விப் பணி

வரிசை

கல்வியும் சமுதாயமும்

T
N61
97639

விலை 20 காசு

சிந்தனைக் குழுவின்
கல்விப் பணி வரிசைக்கு
வழிகாட்டும்
அறிவுரைக் குழுவினர் :

○

டாக்டர் மு. வரதராசனுர்,

பல்கலைச் செல்வர்

தே. போ. மீனுட்சிசுந்தரனுர்,

திரு. க. அருணசலம்,

டாக்டர் மு. அறம்,

திரு. ம. ரா. போ. குருசாமி

○

செயலர் :

திரு. ர. சீனிவாசன்,

திரு. அ. தேவராசன்.

○

190, இராச வீதி, கோவை–1

97659

TN

நன்மை

அன்னிய ஆட்சியால் நம் நா டுக்கு விளைந்த கேடுகள் ப அவற்றில், அன்னிய மொழியாக ஆங்கிலமொழியைவலிந்துபுகுத் நமது இளைஞர்கள் இழிந்த நி யடைய வேண்டுமென்ற நோக் தோடு அவர்களை ஆங்கிலம் ப கச் செய்திருப்பதும் ஒன்று. அ னிய ஆட்சியின் பயனுய் இந்தி வில் விளைந்துள்ள மிகப் பெரி கேடுகளில் இதையும் ஒன்ருக சரித்திரம் சொல்லப் போகிறது. ஆங்கில மொழி நம் மக்களுடைய சக்தியை உறிஞ்சி விட்டது அதைப் படித்துப் படித்து, நம் மாணவர்களின் ஆயுளும் தேய்ந்து விட்டது; ஆங்கில மொழி, பொது மக்களிடமிருந்து இளைஞர்களை பிரித்து விட்டது; படிப்புக்கா செலவை எவ்வளவோ அதி படுத்தி விட்டது. ஆங்கிலப் ப பையே இன்னும் சொல்லிக்கொ துவரும்படி விட்டுவைத்தால் நமது நாட்டின் உயிரையே கரித்து விடுமென்பது நிச்சய ஆகவே, படித்த இந்தியர்கள் கில மொழியின் மீது வைத்த கிற மோகத்தை எவ்வளவு வி விலே உதறித் தள்ளுகிருர்களே, அவ்வளவுக்கு, அவர்களுக்கு மட் மன்றி, பொதுவாக, இந்தியர்க அனைவருக்குமே அதனுல் நன்மை யுண்டு.

— காந்தியடிக

★

முயன்று பார்க்கட்டுமே!

பல்கலைச்செல்வர் திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M. A., B. L., M. O. L.

மனிதன் கூடிவாழும் இயல்புடையவன். சமூகப்பிராணி என்பர் லர். குழுநிலையுயிரினத்தைச் சார்ந்தவன் எனலாம். குழுநிலையில் கூடியுழைப்பதன் கூறுகளைத் தத்தமக்கேற்றவாறு இயல்பூக்கமாய் பிறக்கும் பொழுதே முழுமையும் பெற்று வரும் உயிரினங்களும் உண்டு. அவை புற்றமைத்து வாழும் செல்லுகள், தேன் கூடு அமைத்து வாழும் தேனீக்கள் முதலியன. கூடிவாழும் இயல்பூக்கம் பிறக்கும்போதே பிறப்போடு வந்தாலும், அதன் மலர்ச்சி சூழ்நிலைக்கேற்பப் பலபல வகையில் பழக்கத்தின் பயனாகப் பல வடிவம் பெற்று வளரும் உயிரினங்களும் உண்டு. இவற்றில் தலைசிறந்தது மனிதனம். இயற்கை தன் கூர்தல் அறத்தை (Evolution) உடல் வகையாக வளர்ப்பதனை விட்டுவிட்டது. சூழ்நிலையாய் அமையும் சமூகத்தினைப் பயன்படுத்த வருகிறது. சமுதாயம் பண்பாட்டு வளர்ச்சியின் நிலையம். இந்த வளர்ச்சியே பழக்கங்களாகப் படிந்து விடுகிறது; தலைமுறை தலைமுறையாய் நிலைபெறுகிறது; மேன்மேலும் ஓங்கி வளர்கிறது. இவ்வாறு இயற்கை தன்னை புதிய கூர்தல் அறத்தைக் காண்கின்றாள். அஃதாவது கல்வியே கூர்தல் அறமாகிறது.

பழங்காலங்களில் எல்லாம் கல்வி என்பது சமுதாயப் பழக்கங்களில் குழவிகளைப் பழக்கிவிடுவது என்ற நிலையிலேயே இருந்தது. இயல்பையும் எதிர்க்கப் பழகுவது உண்டு. வருத்தத்திற்கு அஞ்சுவது இயல்பு. கிரேக்க ஸ்பார்ட்டன் நாடு போரில் வெல்வதே சிறப்பென்று கருதியது; வருத்தத்திற்கு அஞ்சாதபடி குழந்தைகளை வாடவிட்டுப் பழக்கியது. போலீசார் என்ன அடித்தாலும் உளவினை வெளியிடாதபடி வளரவேண்டியத் தம் குழந்தைகளைக் குறவர்கள் இன்று அடித்தே வளர்க்கவில்லையா? ஆனால், குடும்பமாய், குடியினமாய், நாடாய் வாழ்ந்த சூழ்நிலை, இன்று உலகமாக முற்றத் தொடங்குகிறது. உலகத்தோடு ஒட்டிப் பழகுவதே கல்வியாகிறது. இதனை அறிந்த வள்ளுவரும்,

''உலத்தோடு ஒட்ட ஒழுகல் பல
கற்றும்
கல்லார் அறிவிலா தார்''

என்று கூறியுள்ளார். உலகமாக முற்றியபோது பழைய பற்றுகள் அறவழியில் விளங்க இடமுண்டு. இந்தியாவை விழுங்க எண்ணும் சீனாவுக்கு எதிரே மெய் வருத்தம் பாராது நம் நாட்டுப் பற்றுக் கொழுந்து விட்டு எரியவேண்டாவா? ஏசு சிலுவை ஏறியபோதும் தம்மைத் துன்புறுத்தியவர்களைக் கடவுள் மன்னிக்க வேண்டும் எனக் கதறவில்லையா?

இயல்புக்கு எதிரான பழக்கம் அறமுமாகலாம்; மறமுமாகலாம். பழக்கத்திற்கு இடம் உண்டு என்பதே இங்கு நாம் காண்கிறோம். தூண்டத் (Stimulus) துலங்குவது (Response) உயிரின் இயல்பு. ஏதே

னும் ஒரு நிலை உடலுள்ளோ வெளியோ எழுந்தால் அதற்கேற்ப மாறி நிற்கிறோம்; எதிருன்றி நிற்கிறோம். ஒருவன் நம்மை அடிக்க வந்தால் தள்ளி நிற்கிறோம். சிலபோது இயல்பான மறிவினை (Reflex Action) யாக இந்த எதிரூன்றல் எழலாம். கண்ணெதிரே விளையாட்டாகக் குத்துவதுபோல ஒருவன் வந்தால், "கண்ணிமைக்க மாட்டோம்" என அவனோடு போட்டி இடும்போதும் நம் வசமின்றிக் கண் இமைத்துவிடுகிறது. உணவைக் கண்டால் நாவில் நீரூறுகிறது. இந்த இயல்பு மறிவினையைச் செயற்கை மறிவினை (Conditioned Reflex) யாகப் பழக்கியும் விடலாம். மணி அடித்த போதெல்லாம் உணவு வருவதைக் கண்ட நாய் மணி அடித்ததும் வாயில் நீரூறி நிற்கப் பழகிவிடுகிறது.

மனிதனிடம் பழக்கம் சிறப்பு நிலை ஒன்றை அடைகிறது. உணவோ, உணவை அறிவிக்கும் மணியோ, விளக்கோ அண்மை நிலையில் அல்லாமல் சேய்மை நிலையில் இருக்கும்போதும் இத்தகைய செயற்கை மறிவினை எழுவதனை மனிதனிடத் தன்றி வேறுஎங்கும் காண்பதில்லை. இயல்பூக்கத்தால் அன்றி அறிவாராய்ச்சியால், வருகிற ஆண்டிற்காக இன்றே உழுது பயிர் செய்யத் தொடங்குவது மனிதன் சிறப்பு. புகை, நெருப்பை விலங்கிற்கும் நினைப்பூட்டலாம்; மணம், தேனீக்கும் மலரை நினைப்பூட்டலாம். இங்கெல்லாம் குறிக்கும் (புகை) குறிக்கப்படுவதற்கும் (நெருப்பு) தொடர்புண்டு. கணக்கறிஞர் இயல் கணிதத்தில் (Algebra) இராமனது குடிகளின் எண்ணிக்கை x என்று வைத்துக் கொள்வோம் என்று பேசும் பொழுது இத்தகைய தொடர்பு உண்டா? ஒன்றும் இல்லை. இதனை அடையாளம் எனலாம். அடையாளத்தை வைத்துக் கொண்டு பழகுதல் மனிதனின் சிறப்பு. இங்கே மனிதனை, எண்ணும் உயிரினம் என்கிறோம். எண்ணம் பெரும்பான்மையும் சொல் வடிவமாகவே எழுகிறது. 'வீடு' என்று எண்ணும்பொழுது பெரும்பான்மையும் 'வீடு' என்ற சொல்லே எண்ணமாக எழக்காண்போம். எறும்பு மொய்க்க இனிக்கும் வெல்லத்திற்கும் வெல்லம் என்ற சொல்லிற்கும் இயற்கையான தொடர்பு ஒன்றும் இல்லை. ஆதலின், அது ஒரு வெற்றடையாளமாகும். வெறும் பதிலீடாக இந்த அடையாளம் அமைகின்றது. முக்காலத்தையும் முழு உலகினையும் நம்முன்னே ஒரே இடத்தில், ஒரே இமைப்பொழுதில் நம் மனத்தில் கொண்டு வர முடிவது எதனால்? இந்த அடையாளங்களின் --- சொற்களின் --- பதிலீட்டு நிலையாலேயே ஆம்.

பண்பாட்டு நிலையின் வளர்ச்சி இவ்வாறு எழுவது மொழியினால் அல்லவா? எனவே, கல்விக்கு அடிப்படை மொழியாக அமைவதில் என்ன வியப்பு?

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப
இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என வள்ளுவர் கூறுவது இதல்லவோ? ஆனால் மொழி, ஒரு கருவி ஓர் அடையாளம் - என்பதனை மறந்துவிட்டு, அதனையே சிறப்பாகக் கொள்வது கல்வியாகாமல், சொல்லாரவாரமாகவே முடியும். வாயில் கவ்விய பொருளை மறந்து நிழலைக் கவ்வச் சென்ற நாயின் கதையே இங்கு நினைவிற்கு வருகிறது. உருப்போட்டு ஒப்புவிப்பதே கல்வி என்ற எண்ணம் இன்னமும்

வாழவில்லையா? 'புரட்சி,' 'தமிழ்', 'விடுதலை,' 'இந்தியா' முதலிய சொற்களை மந்திரமாக முழக்கி உணர்ச்சி கொள்ளும்பொழுது பல முறைகளிலும் அவற்றின் அடிப் படைப் பொருளை மறந்துவிடுகி ரேம்.

எனவே, உயரிய குறிக்கோள் வாழ்க்கையைச் சமுதாயப் பழக்க மாகப் பழக்கிவிடுவதில் மொழி யின் துணையை அடிப்படையாகக் கொள்வதே கல்வி என்பதாம். ஆனல்,மொழிகளோஎண்ணற்றன. எந்த மொழி அடிப்படையாக வேண்டும் என்று கேட்கவும் வேண் டுமா?எந்தச் சமுதாயத்தில் ஒருவன் வாழ்கின்ருனே அந்தச் சமுதாய மொழியே அவனுடைய கல்வி மொழியாகும். இதனை மறுப்பது ஏன்? சமுதாய அடிப்படையில் கல்வி எழுகிறது என்பதனை மறந்து வேறு எதனையோ நினைத்துக்கொள் வதாலேயே ஆம்.

'தாய்மொழி' என்று கூடச் சொல்வதற்கில்லை. தமிழ்த்தாயும் தமிழ்த்தந்தையும் தமிழ் நாட்டில் ஒரு குழவியைப் பெற்றெடுக்கின்ற னர்; உடனே ஆங்கில நாட்டில் வாழச் செல்கின்றனர்; அங்கேயே பலநாள் வாழ்ந்து மறைகின்றனர். தமிழ்மொழி அக்குழவியின் உட லில் ஊறிய மொழியா? பண்பாட்டு நிறுவனங்களான மொழி முதலிய உடல் வகையாக வரும் தாயங்கள் அல்ல; சமுதாயத்தின் பழக்க வழக்கங்களாகப் படிவனவே ஆம். ஆதலின், அத் தமிழ்க் குழவியின் இயல்பான சமுதாய மொழி அங்கே ஆங்கிலமே ஆம். தெலுங்கரும், கன்னடரும், மராட்டியரும் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர். ஒரு சில ரன்றி இவர்களில் பலர் வீட்டிலும் தமிழே பெரும்பான்மையும் பேசு கின்றனர். எனவே, இவர்களது சமுதாயமொழி தமிழன்றி வேறு என்ன?

ஒரு சிலரைக் கற்றவர்களாக்கி ணல் அவர்கள் கூட்டுறவால் எல் லோரும் கல்வியறிவின் பயனைப் பெறுவர் என்று கருதிய ஆங்கிலே யர்களது இந்தியக் கல்வித் திட்ட மும், கல்விக்கும், சமுதாயத்திற் கும் உள்ள இந்தத் தொடர்பை மறக்கவில்லை. விடுதலை பெற்ற இன்றும் கற்றவர் வேருெரு சாதி யாக வாழவேண்டுமா? சமுதாயத் தில் உறவு கொள்வது மொழியால் அன்றிப் பிறிதொன்ருல் ஆகுமா? அதனலன்ருே சமுதாய மொழியே அரசியல் மொழியாகவும் அமைகி றது? தமிழ்நாட்டு அரசியல் மொழி தமிழ் என்பதன் பொருள் வேறு என்ன?

இதனல் பிற மொழிகளைக் கற்ற லாகாது என்பதில்லை. பிறமொழி களை எள்ளி நகையாடுவது பண் பாட்டின் அறிகுறியாகாது. பிற மொழிகளையும் கற்றல் வேண்டும். உலகம் ஒரு குடும்பமாகும்போது பிறமொழிக் கருத்துக்களை அறிய வேண்டாமா? கல்வியின் பயன் பிறமொழியை வெறுத்திடாத பண் புள்ளமே ஆம். மொழிகளுக்கு இடையில் மொழி என்ற வகையில் ஏற்றத்தாழ்வு இல்லை. இலக்கிய வள மன்று இங்கு நாம் கருதுவது; சூழ் நிலை வளர்ச்சிக்கு ஏற்பப் பல கருத் துக்களை விளக்கும் ஆற்றலை வளர்ப் பது எந்த மொழிக்கும் இயல்பாம். ஆங்கில மொழியின் நிலை சில நூற் ருண்டுகளுக்கு முன் எவ்வாறுஇருந் தது? இன்று எவ்வாறு உள்ளது? சூழ்நிலை வளர்ச்சி அம்மொழியிலும் புகுந்து அதனையும் வளர்த்தது; சமுதாயத்தையும் வளர்த்தது. அப் படியே தமிழும் வளரவேண்டுமா

ளுல் சூழ்நிலே வளரவேண்டும்; சூழ் நிலே, மொழியாக வளரவேண்டும். அப்போதுதான் புதிய அறிவு உடலில் ஊறியதுபோலப் பழக்கமாகிவிடும். இவ்வாறு அமையாதவரையில் அறிவு வளர்ச்சி புறக்கோலமாகவே அமையும்; சமுதாயத்திற்குப் பயன்படாது.

பல மொழியைக் கற்ருலும் சமுதாய மொழியே ஒருவனுக்கு இயல்பான மொழி. அதனைத் தாய்மொழி எனப் புகழ்வது அதனுலேயே ஆம். ஐந்தாண்டிற்குள் நம் செயலாற்றல், அறிவுநிலே முதலியவற்றின் போக்கு ஒரு வகையாக நிலேபே றடைகிறது. ஆதலின் அதற்குள் பழகிய மொழியே நம்முடைய இயல்பின் விளக்கமாகிறது. இவ்வாறு அமையக் கூடிய மொழி தாய்மொழியே ஆம். பிறமொழி பல அறிந்து பல நாள் பழகினுலும் திடீரென இடர் வந்தால் 'அம்மா' என்றே தமிழன் புலம்புகிருன். அந்த மொழியில் மேலும் பழகுவதும், எண்ணுவதும், எண்ணங்களைத் தெரிவிப்பதுமே இயல்பு. பிற எல்லாம் செயற்கையே ஆகும்.

மேற்படிப்பு நூல்கள் பிறமொழியில் நிறைய உள என்பதுஉண்மை. அதனுல் அந்த மொழியைக் கற்க வேண்டும் என்று கூறுவதும் பொருத்தமே ஆம் ஆனுல் அதற்காகத் தமிழ் மொழியில் அக்கருத்துக்களே ''எண்ணுதே; எழுதாதே'' என்று கூறமுடியுமா? கல்லூரி மொழியாகத் தமிழ் ஆதல் கூடாது என்பவர் கூற்றின் பொருள் இது தானே?

கற்பவர் கற்றது எல்லாம் சமுதாயத்தில் பரவத் தமிழ்மொழி அன்றித் தமிழ் நாட்டில் வேறு மொழி உண்டா? கல்லூரி மொழி வேறு மொழியாக வேண்டும் என்பவர் ஒன்று செய்வது நல்லது. அவர்கள் விரும்பும் மொழியைத் தொட்டிலிலிருந்து எல்லோரும் பேசும் சமுதாய மொழி ஆக்குவதே அந்த வழியாம். முடியுமா? முயன்று பார்க்கட்டுமே! ●

வீணுகக் கூடாது

பொதுமக்கள் பணத்தைச் செலவு செய்து கல்வி அளிக்கப்படுகிறது. ஆகையால் செலவாகும் பணம் நேரிடையான காரியங்களில் பயன்படுத்தப்பட வேண்டும். கல்வி பெறும் பிள்ளேகள் திறமை வாய்ந்தவர்களாயும், உலகிற்குப் பணிபுரிய முன்வரக் கூடியவர்களாயும், அவர்கள் தாம் பெற்றதைப்போல் பத்து மடங்கு பிறருக்கு அளிக்கக் கூடியவர்களாயுமிருக்குமாறு அவர்களது கல்வி அமையவேண்டும். வயலில் விதைக்கப்படும் ஒரு படி நெல் முளேத்துப் பயிராகி 25 படி நெல்லே அளிப்பதுபோல் மாணவர்களின் அறிவுப் புலத்தில் விதைக்கப்பட்ட கருத்து விதைகள் பன்மடங்கு பெருகிப் பயன் தரவேண்டும்.

வினேபா பாவே

பிரச்சினைகளின் உற்பத்திச்சாலை

டாக்டர் மு. அறம், M. A., M. A. (Ed.), Ph. D.

"கொடிது. கொடிது, வறுமை கொடிது!" என்றார் ஔவைப் பிராட்டியார். இது எவ்வளவு உண்மை! வாழ்வின் எல்லாக் கூறுகளையும் அறிந்து உணர்ந்த அருள் தாயாரின் மெய்யுரை இது.

தனி மனிதனின் வறுமை கொடிது. ஒரு குடும்பத்தின் வறுமையும் கொடிது. ஆனால், ஒரு இனமே வறுமை யுற்றால்.... அது கொடிதினும் கொடிது.

மேலை நாட்டினர் நம் நாட்டுக்கு வருகிறார்கள். அவர்களுக்கு நம் நாட்டின் வறுமைச் சூழ்நிலையைப் பார்த்தால் ஒன்றுமே புரிவதில்லை. நம் நாட்டுக்கு வருமுன்பே அவர்களுக்குத்தெரியும், நம் நாடு ஏழை நாடு என்பது. நம் நாட்டில் அடிக்கடி பஞ்சம் வந்து ஆயிரக்கணக்கான மக்கள் மடிகின்றனர் என்று படித்திருப்பார்கள்; பிறர் சொல்லக் கேட்டிருப்பார்கள். ஆனால், அவர்கள் நேரில் வந்து நம் நாட்டின் வறுமையைக் கண்ணாரக் காணும்போது மனம் அதிர்ச்சியுறுகிறார்கள். மனிதர் மனிதராக வாழாது; மிருகங்களினும் கேவலமாக உழல்கிறார்களே என்று வருந்துகிறார்கள்.

புகழ் பெற்ற நூலாசிரியர் கீஸ்லர் சிறிது காலத்துக்குமுன் இந்தியா வந்தார். பம்பாய் நகரத்து ரயில் நிலையங்களில் இரவில் ஆயிரக்கணக்கான மக்கள் சுருண்டு தரையில் படுத்துக் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியுற்றார். தங்கள் தலையைச் சாய்க்க இவர்களுக்குப் படுக்கையும் வீடும் ஏன் இல்லை என்று இரங்கினார். ரயில் நிலையத்தில் படுத்துக் கிடந்தவர்கள் பிரயாணிகள் என்றால் பரவாயில்லை எனலாம். பிரயாணிகள் சிலரே. வீடு, வாசல் இல்லாது இரவு நேரத்தில் ரயிலடியில் இவ்வாறு தலை சாய்ப்போர் ஆயிரம் ஆயிரம் பேர்.

பம்பாய் நகரத்தில் இரவு பதினொரு மணிக்குமேல் சுற்றிப்பார்க்க வேண்டும். முக்கிய வீதிகளின் இருஓரங்களிலும், சிறு தெருக்களின் ஓரங்களிலும், நெடுகிலும் மக்கள் மிருகங்களினும்கீழாகத்தரையில் படுத்துக் கிடப்பது பரிதாபமான காட்சியாகும். பம்பாய் போன்றே சென்னையிலும்; சென்னை போன்றே பிற நகரங்களிலும்.

வறுமையால் உடல் கெடுவது ஒரு புறமிருக்க, உள்ளமும் கெடும்போது பயங்கரமாகிறது. உள்ளமும் கெட்டு, தன்மதிப்பு இழந்து எப்படியேனும் இரந்து வாழலாம் என்ற நிலைக்கு நம் மக்கள் இழிந்து விடுகிறார்கள்.

"ஈயென இரத்தல் இழிந்தன்று" என்றார் புறநானூற்றுப் புலவர். ஆனால், நம் சகோதரர் எத்துணைப் பேர் கூசாது, மனம் வெட்காது "ஈ" என இரக்கிறார்கள்!

"இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று கடவுளைச் சபித்தார் வள்ளுவப் பெருந்தகை. ஆனால், நம் தாய்

நாட்டில், நம் தமிழகத்தில் இன்றும், சுதந்திரம் வந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆகிய பின்னும், பிச்சைக்காரர் உலவுகிறார்களே! சில ஆண்டுகளில் இறந்துபடப்போகும் வயது வந்தோர் இரங்தால் பரவயில்லை. இரண்டு வயது ஐந்து வயது இளம் பிள்ளைகள் கையேந்திக் காசு கேட்கிறார்களே!

சிறிது காலத்துக்குமுன் சென்னையிலிருந்து கோவை வந்துகொண்டிருந்தோம். அரக்கோணத்தில் இரண்டு ஐரிஷ் மாதர் ஏறினார்கள். அந்தப் பெட்டியில் இருந்த இன்னொருவர் பாராளுமன்ற உறுப்பினர். அரக்கோணத்திலிருந்து புறப்பட்டபின் சுமார் ஒரு மணி நேரம் சுதந்திர இந்தியாவின் முன்னேற்றம்பற்றிப் பல பல பேசினோம். பாராளுமன்ற உறுப்பினர் புதிதாக வந்துள்ள வெளி நாட்டு நண்பர்களுக்கு ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள் பற்றி எடுத்துக் கூறிக் கொண்டு வந்தார். ஐரிஷ் சகோதரிகள் கவனமாகக் கேட்டுக்கொண்டு வந்தார்கள். அவர்கள் மூன்று நாளுக்கு முன்புதான் பம்பாயில் இறங்கி நேராக உதகை செல்கிறார்கள். புதிய நாடு, புதிய சூழ்நிலை - அவர்க்ளுக்கு, எல்லாம் சிறிது திகைப்பாக இருந்ததில் வியப்பில்லை.

ம்று நாட் காலை. கோவை வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே எழுந்து ஆயத்தம் செய்தோம்.மறுபடியும் பேச்சுத்தொடங்கியது. இந்தியா பற்றி ஐரிஷ் நண்பர்கள் கேட்டார்கள். பாராளுமன்ற உறுப்பினரும் நானும் பதில் அளித்தோம். இந்தியாவின் சாதனைகள்பற்றிப்பெருமையாகச்சொன்னோம். வடகோவையில் வண்டி நின்றது. வெளியே பார்க்கலாம் என்று மேற்குப்புறம் இருந்த ஐரிஷ் சகோதரிகள் சன்னல்களைத் திறந்தார்கள். ஒரு கணத்தில் திக்பிரமை பிடித்தவர் போல், முகமெலாம் அதிர்ச்சி தோன்ற, திடீரென்று பின் வாங்கி, எங்கள் பக்கம் திரும்பினர். எக்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்குள் மேல் புறத்திலிருந்து சத்தமும், கூக்குரலும் கேட்டன. அத்தோடு பாட்டல் சத்தமும் வந்தது. என்ன என்று போய்ப் பார்த்தால், கன்னங்கரேலென்ற, கோவணம் மட்டுமே கட்டியிருந்த குழந்தைகள்ஏழெட்டுப் பேர் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு, துள்ளிக் கொண்டு, குதித்துக்கொண்டு, ஏதோ புரியாத பாட்டொன்றைப் பாடிக்கொண்டு, நடுநடுவே "ஐயா, சாமீ காசு" என்று கை நீட்டிக் கொண்டு, அப்பிள்ளைகள் அளித்த காட்சி மிக மிகப் பரிதாபமாக இருந்தது ஐரிஷ் நண்பர்கள் அப்படியே அடங்கி விட்டனர். பாராளுமன்ற உறுப்பினரின் சுருதி முற்றிலும்தளர்ந்து விட்டது நான் துக்கத்தில் ஆழ்ந்தேன்.

"சுற்றித் திரியும் குறவர்களின் குழந்தைகள்" என்றார் நண்பர் மெல்லிய குரலில்.

அரசியல் உரிமை வந்துள்ள நாட்டில் இன்னும் குழந்தைகள் பிச்சையெடுக்கும் இழிநிலை விரைவில் ஒழிய வேண்டும்.

வறுமை என்னும் பீடை நாடெங்கிலும் படர்ந்துள்ளது. இவ்வறுமையே நம் சமுதாயத்தின் முதல் பிரச்சினை. வேறு பல பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால் அவை இம் முதல் பிரச்சனையிலிருந்து தோன்றும் கிளைப் பிரச்சினைகளே.

வறுமைக்கு மருந்து பொருள் உற்பத்தி. பொருள் உற்பத்தி

உழைப்பால் வரும். அறிவோடு கூடிய உடல் உழைப்பால் பொருள் பெருகும். வயல் வெளியில் உழைப்பதால் உணவுப் பொருள் பெருகும். தொழில் கூடத்தில் உழைப்பதால் உடை முதலிய பொருட்கள் உண்டாகும்.

நம் சமுதாயத்தில் வறுமைப் பீடை படரத் தொங்கியது இன்று, நேற்றல்ல. அந்நிய ஆட்சியாளர்களுக்கு இப்பீடை நீங்குவதில் கவலையில்லை. நாட்டைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஆட்சிபுரிவதே அவர்களின் நோக்கமாயிருந்தது. இந்நோக்கத்தோடு ஆங்கிலக்கல்வியைப் புகுத்தினர். இக்கல்வியின் மூலம் அவர்கள் உற்பத்தி பண்ண விரும்பிய பிரகிருதிகளின் தன்மையை லார்டு மெக்காலே விவரித்திருக்கிறார்.

> "நிறத்தில்,தோற்றத்தில் இந்தியர்;
> அறிவில் எண்ணத்தில் ஆங்கிலேயர்"

இந்தப் புது வர்க்கத்தைப் படைக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருந்தது ஆங்கிலக் கல்வி அமைப்பு. இக்கல்வியினால்.

> "நலமோர் எட்டுணையும் கண்டிலேன்"

என்றும், இதனை

> "நாற்பது ஆயிரம் கோடியிலில் சொல்லுவேன்"

என்றும் ஆணையிட்டு அறைந்தார் அண்ணல் பாரதியார்.

ஆங்கில முறையின்கீழ் இருந்த ஆரம்பக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி எல்லாமே மெக்காலே கூறிய பிரகிருதிகளைப் படைத்தனவே ஒழிய நம் சமுதாயத்தின் வறுமைப் பீடையைப் போக்க உதவவில்லை.

அண்ணல் காந்தியடிகள் வந்தார். வறுமை சூழ் நாட்டில் வரட்டு ஏட்டுக்கல்வி பொருளற்றது என்று கண்டு, பொருள் உற்பத்தி தரும் ஆக்கத் தொழிலை மையமாகக் கொண்ட ஆதாரக் கல்வியைக் கண்டுபிடித்தார். ஆதாரக்கல்விக்குப்பின் உயர் ஆதாரக்கல்வி. இது வேளாண்மை அல்லது வேறு உற்பத்தித் தொழிலை மையமாகக் கொண்ட கல்வி. இத்தகைய கல்வி நாட்டின் வறுமைப் பீடையைப் போக்கும். உழைக்கும் திறனை, மனப் பான்மையை இளைஞரிடம் வளர்க்கும். அரசாங்க அலுவலில் சேர்ந்து 'பேனா ஓட்டி' வீரர்களாக விளங்க விரும்பும் பயனற்ற பிரகிருதிகளை உற்பத்தி செய்யாது.

கடந்த பத்து ஆண்டுகளில், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாகக் கல்வி பரவியுள்ளது எக்கல்வி? பழைய கல்வி. மெக்காலே கல்வி. நம் தமிழ்நாட்டில் இப்போது 1300 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. 1951-ல் 637 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன சென்ற மாதம் ஏப்ரல் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு 75,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் சென்றார்கள். இவர்களில் எத்துணைப் பேர் வேளாண்மையிலோ வேறு உற்பத்தித் தொழிலிலோ ஈடுபட்டுச் சமுதாயம் வறுமைப் பீடையிலிருந்து விடுபட உதவுவார்கள்? உயர்நிலைப்பள்ளியில் பல்வேறு தொழில்கள் கற்பிக்கப்பட வேண்டும் என உயர்நிலைப் பள்ளிக் குழுவினர் சிபார்சு செய்தனர் இதன்படி ஏற்பட்டு வரும் பலநோக்குப் பள்ளிகளில் பயின்று வெளிவரும் மாணவர்களாலும் சமுதாயத்துக்குப் பயன் மிகுதியாக உண்டாவதாகத் தோன்றவில்லை.

கல்லூரிக் கல்வியை எடுத்துக் கொண்டால் நிலைமை இன்னும் மோசம். 1951-ம் ஆண்டில் 36 கலைக் கல்லூரிகள் இருந்தன. ஆனல், இப்போது 59 கல்லூரிகள் உள்ளன. இவற்றில் சுமார் 40,000 மாணவர்கள் படிக்கின்ருர்கள். இவர்கள் பி. ஏ. அல்லது அது போன்ற பட்டம்பெற்றுப்பட்டதாரிகளாக வெளிவருகிருர்கள். இவர்களால் வேளாண்மையிலோ வேறு உற்பத்தித் தொழிலிலோ ஈடுபட முடியுமா? இவர்களெல்லாம் ஆங்கிலத்தில் சொல்வார்களே, 'ஜென்ட்டில்மென்' (Gentlemen) அந்த வர்க்கத்தினர். 'ஜென்ட்டில்மென்' என்ருல் யார்? அவர்களது இலக்கணம் என்ன? பெர்னுட் ஷா கொடுத்த இலக்கணம்: Gentlemen are those who consume but do not produce" நம் பட்டதாரிகள் இந்தவகையினர்.

பட்டதாரிகளால் பயன் இல்லை என்பது மட்டுமல்ல. அவர்கள் சமுதாயத்துக்குப் பிரச்சினை. அவர்களுக்கு ஏதாவது வேலைகொடுத்தாக வேண்டுமே. அவர்களுக்கு என்ன வேலை தெரியும்? வெள்ளைத்தாளில் கறுப்பு மை கொண்டு எழுதத் தெரியும். எத்துணைப் பேர் எழுத்தர் ஆக முடியும்? பிறருக்கு வேலையில்லாத் திண்டாட்டம்!

என்ன வேடிக்கை! நம் கல்வி நிலையங்கள் சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் சக்தியுள்ள தலைவர்களை உற்பத்தி செய்வதற்கு மாருக, சமுதாயத்துக்கு இப்போதுள்ள பிரச்சினைகள் போதாவென்று பட்டதாரிகள் என்னும் புதுப் பிரச்சினைகளை உருவாக்கித் தரும் திருப்பணியைச் செய்கின்றன!

'படித்தவர்களைப்பற்றி இவ்வாறு கூறுவது முறையா, மிகவும் மிகைப்படுத்திக் கூறுவதாகாதோ, அவர்கள் அறிவு வளர்ச்சி பெற்றவர்கள் அல்லவா, அவர்களின் அறிவு சமுதாயத்துக்குப் பயன்படும் அல்லவா' என்று கேட்கலாம். அறிவு பெறுகிருர்கள் என்பது உண்மை தான். ஆனல் தெளிவு பெறுவதாகச் சொல்ல முடியாது. நம் சமுதாயச் சூழ்நிலைக்குப் பொருத்தமில்லாத புத்தக அறிவு ஏதோ பெறுகிருர்கள். அதுவும் பிறமொழியின் வாயிலாகக் கற்பதால், அந்த அறிவு கூட மாணவனின் குடும்பத்திலே, சுற்று வட்டாரத்திலே பரவ முடியாது போகிறது ●

தவருன அடிப்படை

தாய்நாட்டு நன்னலமின்றித் தேச பக்தியோடு தியாகங்கள் பல புரிந்து சேவை செய்யும் பல சகோதர சகோதரிகளே, தற்காலப் பல்கலைக் கழகங்கள் உற்பத்தி செய்திருக்கின்றன என்றலும், இக்கல்வியினுல் நாட்டிற்கு நிரந்தரமான பலன்கள் கிடைக்கவில்லை.

இந்தக் கல்விக்கு மெக்காலே பிரபு அஸ்திவாரம் போட்டார். சிற்சில மாறுதல்கள் ஏற்பட்டதைத் தவிர, முதலில் எப்படி இருந்ததோ அப்படியே தான் இந்த அஸ்திவாரம் அமைந்திருக்கிறது. பிரபாய முறை காரணமாக, முன் வந்து முயற்சி செய்யும் சிரத்தை, ஸ்வேச்சை முதலிய அம்சங்கள் இல்லாத ஒரே குமாஸ்தா பட்டாளங்கள் ஏற்பட்டன. கல்வியின் உண்மையான நோக்கம் ஈடேறவில்லை.

— திரு. எஸ். சத்தியமூர்த்தி

எல்லோருக்கும் வாய்ப்பு

'இருகரை இனியன்'

"மாரிக் காலத்துக் காட்டாற்று வெள்ளம் போன்று அறிவியல் துறை, இன்று உலகின் பல பாகங்களிலும் பெருக்கு எடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது. நாளும் புதிய புதிய ஆராய்ச்சி முடிவுகளும், கண்டுபிடிப்புகளும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. மேற்கு நாடுகளில் வளர்ந்துவரும் அறிவுச் செல்வம் நமது நாட்டிலும் வேரூன்றி வளரவேண்டும்; நமது நாடு விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் போன்ற துறைகளில் நல்லபடி முன்னேறவேண்டும் எனில் ஆங்கிலம் மூலம் கற்பது மிகவும் அவசியம்" என்று வலியுறுத்திக் கூறப்படுகிறது. "உலகின் பல பாகங்களில் வளர்ந்துவரும் புத்தம் புதிய கலைகளைக் கட்டி வந்து இங்குச் சேர்க்க, ஆங்கிலம் மூலம் பாடங்களைப் பயில்வது தவிர்க்கக் கூடாதது" என்றும் கூறப்படுகிறது. இக் கூற்றுக்கள் எவ்வளவு தூரம் உண்மையோ?

இருபதாம் நூற்றாண்டின் இந்த அறுபது ஆண்டுகளிலேதான், அறிவியல் துறை வேகமாக வளர்ந்து, நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குத் தொழில் நுணுக்கத் துறையிலிருந்து வான்வெளிப் பயணம்வரைக்கும்வளர்ந்துள்ளது இந்த அறுபது ஆண்டுகளிலே எத்தனை எத்தனை புதுமைகளும், புதிய கண்டுபிடிப்புக்களும் உலகில் நிகழ்ந்திருக்கின்றன! அவை போன்றவை நம் நாட்டில் ஏன் நிகழவில்லை? ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப்புகளும் ஏற்படுவதற்கு ஆங்கிலமூலம் கற்பதுதான் அவசியம் என்றால், நாம் இத்துணை ஆண்டுகளும் ஆங்கிலம் வழிதானே கற்று வருகிறோம்! இந்த நூற்றாண்டில் மட்டுமல்ல, அதற்கு முன்னிருந்தே நம்மவர் அனைவரும் ஆங்கிலம் மூலம்தான் கல்வி கற்று வருகிறார்கள். இன்றும் ஆங்கிலத்திலேயே தான் எல்லாப் பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன. அவ்வாறிருந்தும் நாம் எந்த அளவுக்கு அறிவியல் துறையில் முன்னேறியிருக்கிறோம்? என்ன என்ன புதுமைகளும், கண்டுபிடிப்புகளும் இந்த நாட்டிலே இத்துணை ஆண்டுகளிலே நிகழ்ந்திருக்கின்றன? புதிய ஆராய்ச்சிகளும், புதுமைகளும் நிகழாவிட்டால் போகிறது. மேற்கு நாடுகளில் கண்டவற்றை அவ்வப்போது புரிந்து கொண்டு, அவர்களைக் 'காப்பி' அடித்து இயந்திரங்களும் மற்றவைகளும் நல்ல தரமாகச் செய்யும் திறமாவது பெற்றிருக்கிறோமா? ஆங்கிலம் மூலம் கற்றும் இத்தனை ஆண்டுகளாக நம்மால் ஏன் நல்லபடி முன்னேற முடியவில்லை?

நாம் முன்னேறாததற்குக் காரணம் நமது கல்வி முறையில் உள்ள கோளாறுதான். நமது கல்வி முறை அறிவியல் துறையில் ஆர்வத்தை ஊட்டுவதற்குப் பதிலாக, ஒரு சிலரிடம் துளிர்க்கும் ஆர்வத்தையும் நசுக்குவதாக இன்று இருக்கிறது. நமது கல்வியாளர்கள், சமுதாயத்தின் முதுகெலும்பாக உள்ள தொழிலாளி வர்க்கத்தை மறந்து கல்வி முறையைத் தீட்டியிருப்பது ஒரு பெரிய குறை. இன்று இரும்பு ஆலை, மோட்டார் ஆலை, மின்சாரத் துறை, நூல் ஆலை போன்றவற்றில் வேலை செய்பவர்களில் பெரும்பான்மையோர் எட்டாவது, ஒன்பதா

97639

வது வகுப்புவரை படித்தவர்கள். அவர்களுக்கு அவரவர்கள் துறையிலே ஓரளவு நல்ல ஈடுபாடும் ஆர்வமும் உண்டு. இரும்பு ஆலை ஒன்றில் வேலை செய்பவர் ஒருவர் அருகில் நின்றுகொண்டு, யாராவது இருவர் 'கடைசல் இயந்திரம்' (Lathe) பற்றிப் பேசுவார்களானால், அந்தத் தொழிலாளி அவர்கள் பேச்சைக் கூர்ந்து கவனிப்பார். அவர் பேச்சைக் கவனிப்பதுடன் நிற்காமல், அந்த இயந்திரம்பற்றித் தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் அவர்களிடம் தாமாகக் கொட்டிவிடுவார். இதே போன்று ஒரு மோட்டார் நிலையத்தில் வேலை செய்பவரோ, மின்சாரத் துறையில் வேலை செய்பவரோ தங்கள் துறைபற்றித் தமக்குத் தெரிந்தவற்றை நல்ல தமிழிலோ, கலப்புத் தமிழிலோ மற்றவர்களுக்குச் சொல்லச் சிறிதும் பின்வாங்குவது இல்லை. இந்த அளவு தங்கள் துறைகளில் ஈடுபாடு கொண்டுள்ள தொழிலாளர்களின் ஆர்வத்தை மேலும் அத்துறையில் வளர்க்க இன்று சமுதாயத்தில் வழிவகை உண்டா?

தங்கள் துறைகளிலே உள்ள புதிய புதிய செய்திகளை மேலும் தங்களிடம் சேர்த்துக்கொள்ளத் தொழிலாளர்கள் மிகவும் ஆவலாக உள்ளார்கள். அவர்களில் பெரும்பான்மையோரால் எந்தத் தமிழ்ப் புத்தகத்தையும் படித்துப் புரிந்துகொள்ளமுடியும். ஆனால், இன்று அவர்கள் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். தொழில் நுணுக்கம் பற்றிய எல்லாப் புத்தகங்களும் உள்ளன. அவர்களால் ஆங்கிலம் படித்துப் புரிந்துகொள்ள முடியாது. ஆதலால் அவர்களுக்கும் அறிவுச் செல்வத்துக்குமிடையே ஆங்கில மொழி பெரும் சுவர் போன்று குறுக்கே நிற்கிறது. குறுக்கே நிற்கும் சுவரை எடுத்துவிட்டால் அறிவுச் செல்வம் அவர்களிடம் பாய்ந்து பெருக்கு எடுத்து ஓடும். அவர்களிடமுள்ள அனுபவ அறிவுடன் (practical knowledge) புத்தக அறிவும் (theoritical knowledge) சேர்ந்தால் புதிய ஆராய்ச்சியும், கண்டுபிடிப்புகளும் இங்கே நிகழும்.

புதிய கண்டுபிடிப்புகள் இங்கே நிகழவேண்டுமானால், புத்தக அறிவும், அனுபவ அறிவும் ஒன்றாக இணைந்து செயல்படவேண்டும். இன்று நமது நாட்டிலே, புத்தக அறிவு பெற்றவர்கள் அனுபவ அறிவு அற்றவர்களாகவும், அனுபவ அறிவு பெற்றவர்கள் புத்தக அறிவு அற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இவை இரண்டும் ஒன்று சேர்வதற்கான வாய்ப்பே இன்று நம் சமுதாயத்தில் இல்லை. மேலை நாடுகளிலே, அனுபவ அறிவுபெற்ற ஆர்வமுள்ள தொழிலாளர்கள் புத்தக அறிவு பெற வாய்ப்பு உண்டு. அங்கே தொழிலாளர்களின் தாய்மொழியிலேயே வேண்டிய தொழில் நுணுக்கப் புத்தகங்கள் உள்ளன. தொழிலாளிகளின் தாய்மொழியிலேயே வேண்டிய புத்தகங்கள் வெளிவரக் காரணம், அங்குள்ள கல்லூரிகளில் தாய்மொழிமூலம் கல்வி கற்பிக்கப்படுவதுதான்.

நமது சமுதாயத்தில் ஒரு சாரார், புத்தக அறிவு பெற்று அனுபவ அறிவு இல்லாமலே, அனுபவ அறிவு பெற்றவர்களை மேற்பார்வையிடுபவர்களாகவும், மற்றொரு சாரார் அனுபவ அறிவுமட்டும் பெற்றுப் புத்தக அறிவு இல்லாமல் உடலுழைப்புச் செய்து வாழ்பவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்விரு சாராரும் வட துருவம் தென் துருவம் போன்று தூரத்தில் ஒட்டாமல்

இருக்கிருர்கள். இந்நிலை மாறி ஒன்றுடன் ஒன்று இணைந்து சமுதாய வளர்ச்சிக்கு உதவவேண்டுமானுல் தமிழில் அறிவியல் புத்தகங்கள் நிறைய வெளிவர வேண்டும். தமிழில் புத்தகங்கள் வெளிவர வேண்டுமெனில் கல்லூரிகளில் தமிழ் வழி பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பலர் தமிழில் புத்தகங்கள் எழுதுவார்கள்.

தமிழ் மூலம் பாடங்கள் கற்பிக்கப்பட்டால், படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கும், அனுபவ அறிவுடைய தொழிலாளிகளுக்கும் இடையே இன்றுள்ள இடைவெளி குறையும். தமிழ் வழி கற்றவர்கள் தொழிலாளர்க்குப் புரியும் மொழியிலேயே தொழில் நுணுக்கத்தை அவர்களுக்கு விளங்கும்படி சொல்ல முடியும். ஆனுல், இன்று பட்டம் பெற்றவர்கள், எதையும் தொழிலாளர்களோ, மற்றவர்களோ புரிந்து கொள்ளும்படி சொல்லும் திறன் பெற்றவர்களல்ல அவர்கள் ஆங்கிலத்தில் கற்றதால் மக்கள் மொழியில் தெளிவாகச் சொல்ல அவர்களுக்கு வருவதில்லை. அதனுல் உள்ள அறிவுச் செல்வம், தொழிலாளிகளிடையே பெருக்கெடுத்து ஓடாமல் தேங்கிச் செயலற்றுக் கிடக்கிறது.

தமிழ் வழி அல்லாத கல்விமுறை தொழிலாளிகளின் அறிவியல் ஆர்வத்தை நசுக்கிக் கொண்டிருக்கிறது. இன்றைய கல்வி முறை தொழிலாளிகளின் ஆர்வத்தை நசுக்குவதோடல்லாமல் அந்த இனத்தை ஒருவாறு கெடுத்துக் கொண்டுமிருக்கிறது. இன்று தொழிற்சாலையை விட்டு வீடு திரும்பிய தொழிலாளிகள் தங்கள் ஓய்வு நேரத்தை எப்படிக் கழிக்கிருர்கள்? சீட்டாட்டம், திரைப்படம், இசைத் தட்டுகள், கட்சி வெறி ஊட்டும் பேச்சு, பயனற்ற கதைகள், பாலுணர்வூட்டும் செய்திகள்-இவைதாம் இன்றைய தொழிலாளிகளின் பெரும்பாலான ஓய்வு நேரத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. இத்தகைய பொழுதுபோக்குகளால் யாருக்கு நன்மை? தொழிலாளிகளுக்கா? அவர்கள் சுற்றத்தாருக்கா? அல்லது அவர்களிருக்கும் இந்தச் சமுதாயத்துக்கா? இத்தகைய பொழுதுபோக்குகளால் சமுதாயத்தில் ஏற்படும் கோணல் வளர்ச்சியும் தீய விளைவுகளும் பயங்கரமானவை. இத்துணைக்கும் காரணம் அவரவர்களுக்கு ஆர்வமான துறைகளில் அவரவர்கள் மனத்தை ஈடுபட விடாத இன்றைய கல்வி முறைதான். தாய்மொழியில் அறிவுச் செல்வங்களை வடித்துத் தராத நிலை, சமுதாயத்தில் பயனற்ற தீய பொழுதுபோக்குகளுக்குக் கூட்டம் சேர்ப்பதாக இருக்கிறது.

எந்த நாட்டிலும் வெறும் பட்டம் பெற்றவர்களோ, முறைப்படி கல்லூரிகளில் கற்றவர்களோ மட்டும் நாட்டில் புதிய ஆராய்ச்சிக்கும், கண்டுபிடிப்புகளுக்கும் உதவிவிடவில்லை. எத்தனையோ பேர் தொழிலாளியாகவும், மற்ற வேலை செய்பவர்களாகவும் இருந்துகொண்டு தனிப்பட்ட முறையில் புத்தகங்கள் படித்து அறிவைச் சேர்த்துப் பின் அறிவியல் துறைக்குத் தங்கள் காணிக்கையைச் செலுத்தி யிருக்கிருர்கள். தாமஸ் ஆல்வா எடிசனின் வாழ்க்கை இதற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டு. அவரைப் போன்ற அறிஞர் பலர் நமது நாட்டிலும் தோன்ற மக்கள் மொழியிலே அறிவியல் புத்தகங்கள் மலரட்டும், தாய்மொழிவழிக்கல்விவித்தூன்றி வழிவகுத்துச் சமுதாயத்தில் எல்லோருக்கும் தங்கள் காணிக்கையை அளிக்க வாய்ப்பளிக்கட்டும். ●



வளர்ச்சிக்கு இடமில்லை

காந்தியடிகள்

மேலைநாட்டுப் பண்பாடு நல்லதா கெட்டதா என்பதுபற்றி இங்கே நாம் ஆராயவில்லை. எந்த மொழியிலே கல்வி கற்பிக்க வேண்டும் என்பதே கவனிக்க வேண்டிய விஷயம். இப்போது நமக்கு, கல்வி என்று சொல்லக் கூடியதெல்லாம் உயர்தரப் படிப்புத்தான். அதை ஆங்கில மொழியின் மூலமாகவே நமக்குப் போதித்து வருகிறார்கள். இதுதான் இப்போதுள்ள குறை. ஒரு நாட்டு மக்கள் அந்த நாட்டுக்குரிய உயர்ந்த பண்புகளுடன் விளங்க வேண்டுமானால், அந்த நாட்டு இளைஞர்களுக்கு உயர்தரக் கல்வி மட்டுமன்றி எல்லாக் கல்வியையும் தாய்மொழி மூலமாகவே கற்பிக்க வேண்டும். அனைவரும் அறிந்த உண்மை இது. ஆனால் நமக்கு ஆங்கிலமொழி மூலமாகவே கல்வி கற்பிக்கப்படுவதால், இதை இவ்வளவு தூரம் விரித்துச்சொல்ல நேர்ந்தது. பொது மக்களுடன் இளைஞர்கள் நேருக்கு நேராக நெருங்கிப் பழக வேண்டுமானால், பொது மக்களுக்குத் தெரிந்துள்ள மொழியிலேயே கல்வி பயின்று, தங்கள் அறிவைப் பெருக்கியிருக்க வேண்டும்; இல்லை என்றால், பொது ஜனங்களுடன் தொடர்பு கொள்ள முடியாது; இது கண்கூடான உண்மை. தாய்மொழியையும் அதிலுள்ள இலக்கியச் செல்வத்தையும் படியாமல் அசட்டை செய்துவிட்டு வேறொரு அன்னிய மொழியைப் படித்து, அந்த மொழியிலும் அதனுடைய பேச்சுவழக்கிலும் நிபுணராக எண்ணி, நமது இளைஞர்கள் எத்தனையோ ஆண்டுகளை வீணாக்கி வருகிறார்கள். இப்படி வீணாக்கியும், தினசரி வாழ்க்கையில் அதனால் எந்தப் பயனும் அவர்களுக்குக் கிட்டுவதாயில்லை. இவ்வாறு இளைஞர்கள் வீணாகத் தங்கள் சக்தியை விரயம் பண்ணுவது, நாட்டுக்கு அளவிட முடியாத நட்டமாகும். இந்த நட்டத்தை யாராலே கணக்கிட்டுச் சொல்லமுடியும்? குறித்த ஒரு மொழியில் சயன்ஸ் சம்பந்தமான கருத்துக்களையும் வேறு பல நுணுக்கமான விஷயங்களையும் தெளிவாக எடுத்துச்சொல்லமுடியாதென்றும், அந்த மொழியில் வளர்ச்சிக்கு இடமில்லையென்றும் சிலர் சொல்லி வருகிறார்கள். இதைவிடப் பெரிய மூடநம்பிக்கை வேறு கிடையாது. பேசுகிறவர்களுடைய நடை, உடை, பாவனைகளையும் வளர்ச்சியையும் அப்படியே பிரதிபலித்துக் காட்டுவதே மொழியாகும்.

கல்வியும் சமுதாயமும்

★

மு. வரதராசனார்

"எல்லாம் யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்று பாடினார் தாயுமானவர். ஆனால் உண்பதும் உறங்குவதும் ஆகிய அந்தச் சிறு நன்மைகளைத் தடையில்லாமல் பெறுவதற்காக மனிதன் தனியே வாழாமல் சமுதாயமாய் வாழவேண்டியுள்ளது. சமுதாயமாக அமையாமல், தனித் தனியே வாழ்வதானால், தவறாமல் உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கைக்கும் இடமில்லை; அச்சம் இல்லாமல் கண் மூடி உறங்கலாம் என்ற அமைதிக்கும் இடமில்லை. ஆகவே, எதிர்காலம்பற்றியும் உடலின் பசி முதலிய பற்றியும் சிறிதும் கவலைப்படாத துறவிகள் ஒரு சிலர் தவிர, மற்ற எல்லார்க்கும் சமுதாய வாழ்வு இன்றியமையாததாக உள்ளது. சமுதாயத்தின் சிறு பகுதியே, இல்லறம் நடத்தும் குடும்பம் என்பது. இந்தக் குடும்பங்களாகிய சிறு துளிகள் சேர்ந்தே சமுதாயம் என்னும் கடல் அமைகிறது. இத்தகைய சமுதாயத் துளியாகிய குடும்பமே 'துறந்தார்க்கும் துணை' என்கிறது திருக்குறள்.

தேனீ எந்தப் பூவிலிருந்தேனும் தேனை நுகர்ந்து, எங்கேனும் வாழலாம். ஆனால், பூக்கள் மலராத காலத்தில் என்ன செய்வது? தேன் இல்லாத காலத்தில் எதை உண்டு வாழ்வது? மழைக்காலத்தில் எங்கே ஒதுங்குவது? இப்படிப்பட்ட இடர்ப்பாடுகள் இருப்பதால், தேனீக்களும் சமுதாயமாய்க் கூடிவாழ வேண்டியுள்ளது. அவற்றைப் படைத்த கடவுள், அவ்வாறு கூடிவாழும் திறனையும் அவற்றிற்கு அளித்துள்ளான்.

மனிதனுக்கும் அந்தத் திறன் உள்ளது. ஆனால், சமுதாய வாழ்வு என்னும் கலையின் வித்துமட்டுமே மனிதனுக்கு உள்ளது. அந்த அடிப்படை உணர்வைக் கொண்டு, மற்றவற்றை வளர்த்து அமைத்துக் கொள்ளும் கடமை மனிதனுக்கு ஏற்பட்டுள்ளது.

தேனீக்கு அப்படி இல்லை. தேனீக்கள் கூடி வாழ்வதற்கு எவ்வளவு அறிவு வேண்டுமோ, அவ்வளவும் ஒவ்வொரு தேனீக்கும் பிறவியிலேயே அமைந்துள்ளது. ஆதலால், தேனீக்கள் சமுதாய வாழ்வுக்காக அறிவை வளர்த்துக் கொள்ளத் தேவை இல்லை. உள்ளதே போதும் என்ற நிலையில் அவை வாழ்கின்றன.

மனிதன் உரிமை உடையவன்; அறிவை வளர்த்துக் கொள்ளவும்,

வளர்த்துக்கொள்ளா திருக்கவும், வளர்த்த அறிவைப் பாழ்படுத்த வும் உரிமை உடையவன்.

உரிமை உள்ள இடத்தில் குறையும் இருக்கும். தேனீயின் சமுதாய வாழ்வில் குறை இல்லை; வளர்ச்சிக்கும் இடமில்லை. வியக்கத் தக்க வகையில் அதன் அமைப்பில் ஒரு முழுமை உள்ளது. ஆனால், மனித சமுதாயத்தில் குறை உண்டு; வளர்ச்சிக்கு இடம் உண்டு; போற்றத் தக்க நல்ல கூறுகளும் உண்டு; வெறுக்கத் தக்க தீய கூறுகளும் உண்டு. உலகம் தோன்றிய காலத்தில் தேனீக்களின் வாழ்வு எப்படி இருந்ததோ அப்படியே இன்றும் உள்ளது. ஆனால், மனித சமுதாயம் ஒவ்வொரு நூற்றாண்டிலும் சில பல முன்னேற்றங்களை - மாறுதல்களை - பெற்று (வளர்ந்து) வருகிறது.

தந்தை ஒருவர்க்கு மக்கள் இருவர். மக்களுக்கு வயது வந்த பிறகு பாகப்பிரிவினை ஏற்பட்டது. ஒரு மகனுக்குச் சொத்தில் பங்கைக் கொடுத்துத் தானும் அவனோடு வாழ்ந்தார். தந்தையோடு வாழும் மகன் கவலையில்லாமல் இருக்கலாம்; தந்தையின் சொற்படி நடக்கும் திறன்மட்டும் இருந்தால் போதும். தேனீக்களின் கூட்டு வாழ்வு அப்படிப்பட்டது. ஆனால், மனித சமுதாயம், பங்குடன் வெளியேறிய மகன் நிலை போன்றது. உரிமை பெற்று வெளிவந்தமையால், இடர்ப்பாடுகளும் உண்டு.

இடர்ப்பாடுகளை வெல்வதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் கல்வி வேண்டும்.

மனித சமுதாயம் எவ்வளவு விரிவு அடைந்துவிட்டது! ஊர்களின் அளவில் இருந்த அமைப்பு, நாடுகளின் அளவில் வளர்ந்து, இன்று உலக அளவில் விரிவு பெற்றுள்ளது. சாதி, நிறம், மதம், மொழி முதலியன குறுக்கிட்டுப் பிரிக்க முயல்கின்றன; மொழி தவிர மற்ற எல்லாவற்றையும் கடந்து மனித சமுதாயம் உலக அளவில் விரிவு பெற்று ஒன்றாய்க் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டது. (சந்திரன் முதலான வேறு மண்டலங்களில் மனிதர் போன்றவர் வாழ்வரேல், இது இன்னும் விரிவுபெறும் போலும்!)

தேனீ, எறும்பு முதலியவற்றின் சமுதாயங்கள் இவ்வாறு விரிவடைய வழியே இல்லை. ஒரு தோப்பில் ஒரு மரத்தில் இரண்டு தேன் கூடுகள் இருக்கும் நிலையிலும், அவை ஒன்றுபடுவதில்லையே! மனித சமுதாயம் முழு வளர்ச்சியை நெருங்காத இந்நிலையிலும், உலகத் தலைவர்களும் அறிஞர்களும் ஒன்று கூடி உலகக் குடும்பத்திற்காகப் பேசவும் போராடவும் முடிகிறதே! அதுவே வியக்கத் தக்க வளர்ச்சி தான்!

ஆனால், இவ்வாறு விரிவடைய அடைய, மனிதரின் பொறுப்பும் வளர்கிறது. பல துறைகளை விரிவாக்க வேண்டி நேர்கிறது. அதனாலேயே தபால், தந்தி, செய்தித்தாள், வானொலி முதலியவற்றிற்கு உரிய அறிவும் திறனும் ஒவ்வொருவர்க்கும் வேண்டியன ஆகின்றன. பொருள்கள் இங்கும் அங்கும் மாற வேண்டிய தேவையும், மனிதர் இங்கும் அங்கும் போகவேண்டிய தேவையும் ஏற்படுகின்றன. போக்குவரத்து, நிதிநிலையங்கள் (பாங்குகள்), நாணயச் செலாவணி முறைகள் முதலியன தேவையாகின்றன. அவற்றிற்கு உரிய அறிவும் திறனும் பலர்க்கும் வேண்டியன ஆகின்றன. இவற்றைப் பற்றிய கல்வி இன்றியமையாதது ஆகின்றது.

யாதேனும் நாடு ஆக, யாதேனும் ஊர் ஆக, மனிதர்க்குக் கல்வி உறுதுணை ஆகிறது.

மனிதர் சமுதாயமாய் அமைய, இருவகைப் பண்புகள் கட்டாயமாக வேண்டும். ஒன்று, தன் நன்மையை விடச் சமுதாய நன்மையைப் பெரிதாகக் கருதி, பொது விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பண்பு. மற்ெறான்று, தன் உணர்ச்சிக்கு முதலிடம் தராமல் பிறர் மனம் அறிந்து நடக்கும் பண்பு. இந்த இரண்டு பண்பும் வளர வேண்டுமானல், மனிதன் வல்லவனக இருப்பதோடு அமையாமல், நல்லவனுகவும் வாழக் கற்றல் வேண்டும். ஆகவே, சமயக் கல்வி, ஒழுக்கக் கல்வி ஆகியவை தேவையாகின்றன. நிலநூல், வான நூல், பயிர் நூல், பொருள் நூல் முதலியன சமுதாயத்தின் புறவாழ்வுக்குத் தேவையாதல் போலவே, அற நூல் முதலியன சமுதாய அகவாழ்வுக்கு அடிப்படை அமைப்புக்குத் தேவையாகின்றன.

இந்த இருவகைக் கல்வியும் பெற்று ஆற்றலும் பண்பாடும் வளர்ந்த மனிதரின் தொகை பெருகப் பெருக, மனித சமுதாயம் சீரும் சிறப்புமாய் விளங்குவதாகும். ●

பயன்தான் என்னவோ

: திரு. ர. சீனிவாசன் :

தனி மனிதனின் கூட்டம் சமுதாயமாகக் கருதப்படுகிறது. தனி மனிதன், தான்மட்டும் உயர்ந்தால் போதும் என்று எண்ணுவது தன்னலம்; தானும் சமுதாயமும் இணைந்து, உயர்ந்து வாழவேண்டும் என்று நினைப்பது பொதுநலம். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் உண்ண உணவில்லாது, உடுக்க உடை இல்லாது, இருக்க இடமில்லாது, எழுதவும், படிக்கவும், சிந்திக்கவும் தெரியாது விலங்குகளைப் போல் வாழ்கின்ற நாட்டில் "நான் மட்டும் நல்லவனுக, அறிவுள்ளவனுக, பொருள்துறையில் நிறைவுள்ளவனுக ஆகிவிட்டால் போதும்" என்று நினைப்பது கொடிய குற்றமாகக் கருதப்பட வேண்டும்.

மனிதனுக்கும் விலங்குகளுக்கும் அடிப்படையில் பல வேறுபாடுகள் உண்டு. அதில் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன மனிதனுடைய பகுத்தறிவும், அதை ஒட்டி வளர்ந்திருக்கின்ற ஆக்கச் சிந்தனை, பிறர் நலம் பேணல் முதலியனவாகும். மனிதன் பிறருடன் சேர்ந்து வாழும் தன்மை படைத்தவன். இதை எண்ணியே கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டில் "மனிதன் ஒரு சமுதாயப் பிராணி" (Man is a social animal) என்று கூறியுள்ளார்.

தனி மனிதனை உயர்த்தச் சமுதாயத்தில் பல துறைகள் ஏற்பட்டன. அவற்றில் தலையானவை சமயம், கல்வி முதலியன. சமய அடிப்படையில் பல நூல்களும், கல்வித் துறையில் எண்ணற்ற இலக்கியங்களும் உருப் பெற்றன. சமயமும் கல்வியும் தனி மனிதனை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டு இயங்கிய காலமும் உண்டு. சமயத் துறையைச் சார்ந்தவர்கள் காட்டிற்கோ, மலைக்கோ சென்று தனி இடத்தில் ஒதுங்கி, தம் உள்ளத்தை உயர்த்த, ஆன்மாவை வளர்க்க இறை வழிபாட்டில் ஈடுபட்டனர். அதுபோலக் கல்வித் துறையிலும் பழங் காலப் பெரி

யோர்கள் தம் இடத்தில் குறிப்பிட்ட சில மாணவர்களைக் கூட்டி வைத்துக் கற்பித்து வந்தனர். சமயமும் கல்வியும் அதனால் விளையும் பயனும் சமுதாயத்தில் ஒரு சிலருக்கே பயன் அளித்து வந்தன. இந்நிலையை மாற்றி அமைத்துச் சமய உண்மைகளும், கல்விச் சிந்தனைகளும் சமுதாயம் முழுமைக்கும் பயன்பட வேண்டும் என்ற முழக்கம் மேலை நாட்டிலும் கீழை நாட்டிலும் எழுந்தது.

நமது நாட்டில் இக்கருத்துக்கு வலிவும் பொலிவும் அளித்தவர்களில் சுவாமி விவேகானந்தர் குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவர் சமயத் துறையில் நிறைவாழ்வு வாழ்ந்த பெரியார். சமய நெறிகளைத் தூய்மையோடு ஒழுகுவதன் வாயிலாக மனிதன் எவ்வளவு உயர்ந்த சக்தியைப்பெற்றுவிளங்க இயலும் என்பதற்குச் சான்றாகத் திகழ்ந்தவர். சமயத்தையே தமது வாழ்வின் உயிர்ப்பாக அமைத்துக்கொண்டு - அமெரிக்கா போன்ற லோகாயத நாடுகளும் நமது சமயக்கருத்துக்களை ஏற்றுப் போற்றுமாறு பணியாற்றியவர். அவர் கூறுகின்ற கருத்து நமது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாக அமைகின்றது. "சென்ற காலத்தில் நாம் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகக் கடவுளை வழிபட்டு வந்தோம். இனி, அடுத்த ஒரு நூற்றாண்டுக்கு மக்களை வழிபட்டு மக்களுக்குத் தொண்டு செய்வதையே சமயமாகக் கொள்ளுங்கள்" என்று கூறுகின்றார். இதைவிட மனிதனுக்குத் தேவையான சமுதாய உணர்வைச் சிறப்பாக எடுத்துக் காட்ட இயலுமா? தனி மனிதனை உயர்த்தச் சீரிய சாதனமாகத் திகழும் சமயத் துறைக்கே இந்த விளக்கம் பொருந்துமெனில் கல்வியின் பயன் சமுதாயத்திற்குப் பயன்படும் தன்மையைப் பொறுத்தே மதிப்பிட இயலும் என்ற உண்மையை யாரே மறுக்க இயலும்?

இன்றும் சிறந்த துறவிகள் வாழ்கின்றார்கள். அவர்கள் காட்டிற்கோ, மலைக்கோ, குகைக்கோ ஓடிவிடவில்லை. மக்கள் மத்தியில் இருந்துகொண்டு கல்வித்துறையில், மருத்துவத் துறையில், இன்ன பிற துறைகளில் தூய்மையோடு தொண்டாற்றி வருகின்றனர். இன்னும் சீரிய ஆசிரியர்கள் முன்னோர்களைப்போல ஆற்றங் கரையில் அமர்ந்து கொண்டு குறிப்பிட்ட சிலருக்குக் கற்பிக்க விரும்பவில்லை. கல்வித்துறையில் இருந்துகொண்டு 'அனைவரும் கற்க வேண்டும்' என்ற நல்லெண்ணம் நிறைவேற அயராது உழைத்துவருகின்றனர். இவற்றிற்கெல்லாம் காரணம் யாது? சமயத்தாலும் கல்வியாலும் பெறும் நல்லன யாவும் ஒரு சிலருக்கே பயன்படுதல் சாலாது; சமுதாயம் முழுமைக்கும் பயன்பட வேண்டும் என்ற ஆர்வமே காரணமாகும்.

இக்கருத்துக்களுக்குச் சான்றாக இன்றும் நம்மிடையே வாழும் பல பெரியார்களைக் கூற இயலும். அவர்களில் வினோபா அடிகள் தலைசிறந்தவர். அவர் அரசியல்துறையில் இருந்தாலும் பற்றற்ற துறவி; கல்விச் சிந்தனையாளர். "பல ஆண்டுகள் நான் பயிற்சியால் முயன்று பெற்ற ஆற்றலை, எளிதாக இளமையில் பெற்று விளங்குபவர்" என்ற பாராட்டுதலைக் காந்தி அடிகளிடம் பெற்றவர். அவர் மக்கள் மத்தியில் இருந்துகொண்டு, நாள் தோறும் ஊர் ஊராக நடந்து சென்று ஏழை, எளியவர்களுக்காகத்

தொண்டாற்றி வருகின்றார். தனி மனிதன் உயர்ந்தால்மட்டும் போதும் என்று அவர் எண்ணி இருப்பாரேயானால் இமயமலையின் அடிவாரத்திற்குப் போய் ஆசிரமம் அமைத்து வழிபாடு செய்துகொண்டிருப்பார். ஆனால், அவரால் அப்படி இருந்துவிட இயலவில்லை. காரணம் என்ன? வினோபா அடிகள் சமயமும் கல்வியும் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்று எண்ணுவதே காரணமாகும்.

நான் இருந்துவரும் நிலையத்தை யொட்டி ஒரு தோப்பு இருக்கிறது. அதில் வாழையும் தென்னையும் நிறைந்துள்ளன. அதனை ஒவ்வொரு முறை பார்க்கின்ற பொழுதும் புதிய சிந்தனை எழுகிறது. தோப்பைப் போற்றிப் பாதுகாக்கின்றோம். நீர் ஊற்றுகிறோம்; உரம் இடுகின்றோம்; வேலி அமைக்கின்றோம். இவை அனைத்திற்கும் காரணம் என்ன? தென்னை, வாழை இவற்றின் ஒவ்வொரு உறுப்பும் சமுதாயத்திற்குப் பயன்படுகின்றது. ஆனால், அதே நேரத்தில் அனாதைக் குழந்தைகளை வளர்க்கவோ, போற்றவோ யாரும் தயாராக இல்லை. தென்னையையும் வாழையையும் எண்ணற்ற இடையூறுகளுக்கிடையே காத்துவரும் மனிதன், உயிரோடும் உணர்வோடும் தன்னோடு ஒன்றிய அனாதைக் குழந்தைகளை வளர்க்க முன் வருவதில்லை. காரணம் என்னவோ? தென்னையும் வாழையும் தமக்காக எதையும் எடுத்துக்கொள்வதில்லை. அனைத்தையும் சமுதாயத்திற்கே அளிக்கின்றன. அனாதைக்குழந்தை வளர்ந்து பெரியவனான பின் வளர்ப்பவர்க்கோ, சமுதாயத்திற்கோ பயன்பட மாட்டான்; அத்தோடு நில்லாது சமுதாயத்தைச் சுரண்டியும் வாழ்வான். இந்நிலையே தோப்பை வளர்க்க முன்வரும் மனிதன் அனாதைகளை வளர்க்க முன் வராமைக்குக் காரணமாகும்.

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இத் தமிழ் மண்ணில் வாழ்ந்தவர். வாழ்வின் சீரிய உண்மைகளை உணர்ந்து, தெளிந்து அனைவரும்கற்றுப் பயன் பெறுமாறு நூலாக ஆக்கியுள்ளார். மனிதஇனத்தின் நோய்நாடி நோய் முதல் நாடி மருந்தளித்துச் சென்றார். "அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன்நோய் போல் போற்றாக்கடை" என்று கேட்பது, எந்த அளவுக்குக் கல்வியும் சமுதாயமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து விளங்க வேண்டும் என்பதைத் தெளிவாக அறிவுறுத்துகின்றது. பிறர் துன்பத்தைத் தனது துன்பமாக எண்ணி, சமுதாயத்தின் தீமைகளைப் போக்காவிட்டால் அறிவினால் விளையும் பயன்தான் என்னவோ என்று வள்ளுவர் விடுக்கும் வினா, சமயத் தலைவர்கள், அரசியல் அறிஞர்கள், இலக்கிய மேதைகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பிற துறையினர் ஆகிய அனைவரும் தீவிரமாகச் சிந்தித்துச் செயலாற்றத் தக்கதாகும். ●

பளு குறைந்துவிடுகிறது

பிரதேச மொழியைக் கொண்டு பாடங்களைப் போதிப்பதால் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் புத்தி பூர்வமாக ஏற்படக் கூடிய பளு குறைந்து விடுகிறது.

— திரு. எஸ். சத்தியமூர்த்தி

இணைப்பு வேண்டும்

ம. ரா. போ. குருசாமி

'தனிமனிதன்' என்று எவனுமே இல்லை. உள்ள வளர்ச்சியில், அவ் வளர்ச்சியை நாடும் முறையில், அம்முறையிலே கொள்ளும் முனைப்பில், அம்முனைப்பிலே உருவாகும் 'தன்மை'யில்—அதாவது ஆளுமையில் — 'தனித்துவம்' இருக்கும். ஆனால், அந்தத் தனித்தன்மை எனும் ஆளுமை, உதிரி ஆளிலே நின்றுவிடுவதில்லை; ஏனெனில் ஒட்டு உறவு இல்லாத 'தனி' மனிதன் இருக்கமுடியாது.

பல நூறாயிரம் உயிரினங்களைக் கொண்டது உலகம். தெரிந்தோ, தெரியாமலோ எல்லா உயிர்களும் ஒன்றை ஒன்று பாதிக்கின்றன; புரிந்தோ புரியாமலோ ஒன்றுக்கு ஒன்று உதவுகின்றன. உயிர்க் கூட்டங்கள் எப்படித் தனித்து நிலவுவதில்லையோ, அப்படியே கோடிக்கணக்கில் வாழும் மனிதனும் தனித்து நிலவமுடியாது. காங்கோ மனிதனுக்கும் பாரதத்து மனிதனுக்கும் என்ன தொடர்பு? மேற்போக்கான பார்வையிலே ஒரு தொடர்பும் இல்லை. ஆனால், ஐ. நா. எதற்கு, காங்கோவுக்கு இந்தியப் படை வீரர்கள் ஏன் போகவேண்டும் - இப்படிச் சில கேள்விகளைக் கேட்டால் 'இந்தியா என்னும் நாடு தன்னந் தனியாக இல்லை; உலக நாடுகளின் ஒன்றிய இணைப்பிலே தான் மனிதனின் வாழ்வுக்கு நிலைபேறும் பொலிவும் உண்டு' என்று அறிஞர்கள் சொல்கிறார்கள்.

உலக நாடுகளின் ஒட்டு உறவு எப்படியோ, அப்படித்தான் மனித உறவும். ஒவ்வொரு மனிதனும் பயன்படுத்தி அனுபவிக்கின்ற வாழ்வின் ஒவ்வொரு கணமும், 'என் ஒருவனால்மட்டுமே நான் வாழவில்லை' என்ற அறிவை விளக்கும். 'மனிதன் ஒரு சமுதாய விலங்கு' என்று சொல்லும் பழமொழி மிகுந்த உண்மைச் செறிவுடையது.

சமுதாயத்தின் உறுப்பாகவே நாம் இருக்கிறோம் என்ற உணர்ச்சியை மறப்பவன் செத்தவருள் வைத்து எண்ணப்பட வேண்டியவன்; அல்லது செருக்கின் உருவமாய்த் திரியும் வெறியன். சமுதாயம் தரும் அருட்கொடையின்றி ஆணைச் சிறப்புடைய அரசனும் வாழமுடியாது; ஆசைத் துறவு கொண்ட ஆண்டியும் வாழமுடியாது சமுதாயத்தோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு அதன் நலத்துக்கு ஏற்றபடி வாழாதவன் அறிவுடையவன் ஆகான். சமுதாயத்திற்கு ஏற்றபடி என்னும்போது 'ஊரோடு ஒத்து வாழ்' என்றும் 'ஊருடன் கூடி வாழ்' என்றும் பெரியவர்கள் சொல்லியிருப்பதை நினைந்து பார்க்க வேண்டும். சில சான்றோர்களின் செயல்கள் ஊர்க் கருத்துக்கு முரண்பட்டவை போலத் தோன்றும். 'சான்றோர் செயல் சரியில்லையே' என்று உடனே தீர்ப்பிடுதல் சரியாகாது. சமுதாயத்தின் மைய ஓட்டத்தைப் புரிந்துகொண்ட சான்றோரின் செயலை அளந்தறியச் சாதாரண அறிவு போதாது; அனுபவச் செறி

வும் அறிவின் தூய்மையும் வேண்டும்.

உலகத்தோடு ஒட்டி ஒழுகத் தெரியாதவன் எத்தனை வித்தை கற்றாலும் அறிவிலி தான். வள்ளுவர் சொன்ன இந்தக் கருத்தினைக் கல்விப் பணியாளர் கருதிப் பார்க்க வேண்டும். ஆயிரக் கணக்கான நூல்களைப் பல மொழிகளில் கற்றறிந்து ஆழ்ந்து தோய்ந்த அறிவு பெற்றுப் பட்டங்கள் பல சேர்த்திருக்கலாம் சிலர். ஆனால், உலகத்தோடு ஒட்ட ஒழுகும் தகுதி அவர்களுக்கு இருந்தாலொழிய, அவர்களை அறிவுடையவர்கள் என்று சான்றோர் ஏற்பதில்லை. "பல பட்டதாரிகள் உலகத்திலே செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்கிறார்கள். அவர்கள் அறிவுடையவர்களா" என்றால், "அவர்களை அறிவாளிகள் என்பது சரியன்று" என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், படிப்பும் பட்டமும் இல்லாத எத்தனையோ பேர் செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்வதை நாம் பார்க்கத்தானே செய்கிறோம்! உலக நடையின் நெளிவு சுழிவுகள் தெரிந்து, தன்னைக் காத்துக்கொள்வது வல்லவர் செயல்; நல்லவர் செயலென்று எப்படிச் சொல்வது! அறிவு என்பது தனியொருவன் மட்டும் வல்லவனாக வாழச் சொல்லிக் கொடுப்பது அன்று. மனிதன் சமுதாயத்தின் உறுப்பே என்றும், சமுதாயத்தின் அருட்கொடையால் வாழ்பவனே என்றும் சொன்னதை மறந்திடக் கூடாது.

அறிவு என்பது ஏதேனும் ஒன்றைப் பற்றித் தெரிந்துகொள்வது மட்டுமன்று. 'இந்தப் பாடலின் கருத்து இது' எனவும், 'இந்த இயந்திரம் வேலை செய்வதற்கு இன்னின்னவை வேண்டும்' எனவும், 'இந்த மலையின் உயரம் இத்தனை அடி' எனவும், 'இந்த நோய் இதனால் வருகிறது' எனவும் சில பல செய்திகளைத் தெரிந்து கொள்வது தான் அறிவு என நினைப்பது பேதைமையாகும். 'செய்திகளின் குவியலே படிப்பு' என்றால், நூல் நிலையப் புத்தகங்களாகிய அஃறிணைப் பொருள்களுக்கும், படிப்பாளிகள் எனக் கருதிக்கொள்ளும் உயர்திணை மனிதர்களுக்கும் வேற்றுமை என்ன? செய்திக் களஞ்சியங்கள் உலகத்திலே வேண்டிய மட்டும் உண்டு. புத்தகங்களிலிருந்து மனித மூளைக்கு இடம் பெயர்ப்பதுவே கல்வி என்றால், அந்த வீண் வேலைக்குக் காலத்தையும் பொருளையும் பாழாக்குவது பெரும் பாதகமாகும்.

அறிவு என்னும் அனுபவ விளைச்சல் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும். கற்றும் கேட்டும் சேர்க்கின்ற விளக்க மெல்லாம், பயன் உடையதாய் விளைய முடியுமானால் தான் கல்வி எனப்படும். 'கற்கத் தகுந்தவற்றைக் கசடு அறக் கற்க வேண்டும்' என்று சொல்லி வள்ளுவர் நிறுத்திவிட வில்லை; குறுகத் தரித்த குறளில் எல்லாச் சொற்களும் இன்றியமையாதவையே. 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற போது செய்திக் களஞ்சியம் செயற்களத்திலேதான் முற்றுப் பெறும் என்பதை வள்ளுவர் குறித்திருக்கிறார். சமுதாயத்தோடு தொடர்புபடுத்தி நிலைநிற்கக்கூடியதுதான் கல்வியாகும். கல்வி நிலையத்தின் நான்கு சுவர்களுக்குள் பெறும் அறிவை வெளிச் சூழலோடு சீராகப் பொருத்துவதே கல்வி என்று வெள்ளைக்காரர்களும் சொல்லியிருக்கிறார்கள்!

கல்வி நிலையங்களை நடத்துவதற்கு

உறுதுணையான எல்லாவற்றையும் தருவது சமுதாயம்தான். இதிலே ஐயத்திற்கு இடம் இல்லை. பெறுகின்ற அளவுக்குத் தகுந்தவாறு, தருகின்ற திறமும் கல்வி நிலையங்களுக்கு இருக்கவேண்டும். சமுதாயத்திற்கு நேரடியாகவும் உடனடியாகவும் இல்லாவிடினும் மறைமுகமாகவும் நாளடைவிலுமேனும் தகுந்த பயன் தருகின்ற கல்வி நிலையங்களே வாழத் தகுந்தவை. நூல்களிலுள்ள செய்திகளை மூளையிலே திணித்துப் பட்டதாரிகளை வெளியேற்றி, அப்படி வெளியேற்றியவர்களைச் சமுதாயச் சுமைகளாக்கும் கல்வி நிலையங்களை நடத்துவதால் நன்மை இல்லை; நன்மை இல்லை என்பதுமட்டுமில்லை; அவற்றால் தீமையே பெருகும். சிக்கல்களை நீக்கப் பயன்பட வேண்டிய கல்வி நிலையங்கள் சிக்கல்களின் உற்பத்திச் சாலைகளாக இருக்கலாமா?

அமெரிக்கா முதலான நாடுகளில் படிப்பது என்பது, ஏதோ இரண்டெழுத்தை எழுதத் தெரிந்துகொண்டு 'வெள்ளை வேட்டி' களாகத்திரிவதற்குப் பயன்படுவதில்லை. பயன்படாத படிப்பை அங்கே கல்வி என்று கருதுவதில்லை. சமுதாயத்தை மறப்பதையோ, சமுதாயத்திற்குப் பணி புரியாததையோ கல்வி என்று கருதும் சூழ்நிலை அங்கே இல்லை.

நம் நாட்டுக் கல்வி நிலையங்களின் நிலை என்ன? தொடக்கப் பள்ளியிலே 'எண்ணும் எழுத்தும்' சொல்லிக் கொடுக்கிறார்கள்; அதற்குமேலும் 'ஏதோ' உண்டு. உயர்நிலைப் பள்ளியில் செய்திக் களஞ்சியச் சுமை ஏறத் தொடங்குகிறது. என்ன படிக்கிறோம், ஏன் படிக்கிறோம் என்று தெரிந்துகொள்ளாமலே கல்லூரிக்குள்ளும் நுழைகிறோம். 'படித்தால்தான் உத்தியோகம்' என்ற ஒரு போலி நம்பிக்கையிலே கல்லூரிகளில் உழல்பவர் பெரும்பாலோர் ஆவர். தொழிற் கல்லூரிகளில் படித்து வெளியேறுவோர் கதையும் இன்றுவரையில் இதுதான். பொறியியல் வல்லுநர் என்று 'பட்டம்' பெறுகிறவர், பதவி பெறுவதோடு சரி; பயனுடைய உற்பத்தி என்றோ, இயந்திரங்களை நேராகக் கையாள்வதென்றோ, கல்லிலும் மண்ணிலும் இரும்பிலுமாகத் தொழில் செய்வதென்றோ தங்கள் கல்வியைப் பற்றிப் பெரும்பாலும் நினைப்பதே இல்லை. இந்த வேலைகளெல்லாம் திறமையுடைய தொழிலாளர்கள் (skilled labourers) செய்ய வேண்டியவையாம்! அந்தத் தொழிலாளர்களுக் கல்லவா பட்டம் கொடுக்க வேண்டும்? பட்டம் இவர்களுக்கு; பணி அவர்களுக்கு! படிப்பு இவர்களுக்கு; பயிற்சி அவர்களுக்கு! தொழிற் கல்வி நிலையங்களின் கதையே இப்படியென்றால், ஏனைய கல்வி நிலையங்களைப் பற்றி என்ன சொல்ல! இங்கே கல்விக்கும் சமுதாயத்திற்கும் தொடர்பு எதுவும் இல்லையென்று சொல்வதிலே பெரும்பிழை ஒன்றும் இல்லை.

வேலை செய்யாமலேயே மதிப்போடு வாழும் வித்தை—படித்தவனுக்கு. வேலை தெரியாவிட்டாலும், வேலை செய்பவனை வெருட்டி மிரட்டுவதற்கு வாய்ப்பு—படித்தவனுக்கு. நம் நாட்டுக் கல்விக்கும் சமுதாயத்துக்கும் உள்ள உறவு நிலையை ஒருவாறு இப்படிச் சொல்லலாம்.

அயல் மொழியிலே படிப்பு நடப்பது இந்த ஏமாற்று வேலைக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. தமி

ழிலே படிப்பு என்று தமிழ் நாட்டிலே ஆகிவிட்டால், பொறியியல் வல்லுநர்கள் ஒரே ஆண்டில் நூறுயிரக் கணக்கிலே பெருகுவார்கள். தொழிற்சாலைகளிலும் அணைக்கட்டுகளிலும் பிற பிற இடங்களிலும் இயந்திரங்களைக் கையாண்டு திறம் பெற்றும் ஆங்கில எழுத்தறிய வாய்ப்பில்லாமையால் வெறுந் தொழிலாளராக இருப்பவர்களெல்லாம் 'படித்தவர்கள்' ஆகிவிடுவார்கள். பிறகு இன்றைய 'பட்டந் தாங்கி'கள் அவர்களிடம் படிக்கவேண்டிய நிலைகூட ஏற்படும்...................... எப்படியோ, சமுதாயத்துக்கும் கல்வி நிலையங்களுக்கும் இடையே கிடக்கும் கிடங்கு தூர்க்கப் பெறும்.

மற்றொரு கருத்தும் இங்கே நினைப்பதற்கு உரியது. தமிழ் நாட்டில் பல பல தொழிற்சாலைகளில் உண்மையில் உழைப்பவர்களெல்லாம் நுணுக்கம் அறிந்தவர்களே என்பதில் ஐயமில்லை. நுணுக்கம் தெரியாதவர்கள் இயந்திரங்களோடு பழகமுடியாதல்லவா? இயந்திரங்களும் மனிதர்களைப்போலத் தான் என்றால், நெளிவு சுழிவு தெரிந்து சமாளிக்கும் வல்லமையைச் செலுத்திப் பார்க்கலாம். இயந்திரத்துக்குப் பொய் சொல்லவோ, வல்லமையைப் புரிந்து கொள்ளவோ முடியாது. எனவே, அவற்றை இயக்கும் தொழிலாளர்களெல்லாம் இயந்திரத்தின் நுட்பங்களை அறிந்தே தொழில் செய்கிறார்கள். இவர்களெல்லாம் எங்கே படித்தார்கள்? எந்த மொழியிலே படித்தார்கள்?

கோடிக் கணக்கான ரூபாய்களை ஆண்டுதோறும் விழுங்கிக்கொண்டிருக்கும் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் படிப்பாளிகள் சமுதாயத்திற்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறார்கள்? எப்படியோ தொழிற்சாலைகளில் நுழைந்து இயந்திரங்களோடு பழகிப் பழகியே தேர்ந்த 'படிப்பிலி'கள் சமுதாயத்திற்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறார்கள்? இதைப் பற்றிச் சற்றே ஆர அமர இருந்து எண்ணிப் பாருங்கள். உண்மையான படிப்பாளிகள் யார் என்று அதன் பிறகு முடிவு செய்யுங்கள்.

'கல்வி நிலையங்களால் சமுதாயத்திற்குப் பயன் இல்லை; ஆதலால் மூடிவிடுங்கள்' என்று நான் சொல்லவில்லை. சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் கல்வி நிலையங்களின் அமைப்பை மாற்றவேண்டும் என்றுதான் இவ்வளவும் சொல்லுகிறேன்.

தனக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும் புரியாத மொழியிலே எதையெதையோ படித்துவிட்டு, படித்ததைத் தேர்வோடு மறந்து, நூற்றுக்கு முப்பத்தைந்தோ நாற்பதோ வாங்கிப் பட்டத்தைச் சுமந்து திரியும் பயனிலிகளை உலவவிடுவதிலே என்ன புண்ணியம் உண்டு? சமுதாயத்தில் மேலும் மேலும் சிக்கல்களே பெருகும்.

1947-க்குப் பிறகு நமக்குப் பெருகியுள்ள பொறுப்புக்களை — நமக்கு நாமே ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புக்களை எண்ணிப் பார்க்க வேண்டும். நாற்பத்து மூன்று கோடி மக்கள் நிரம்பிய பாரத சமுதாயம் உலகத்துக்கு ஒரு புதுமையாக வாழ்வதா, அன்றி உலகத்துக்கு ஒரு சுமையாக வாழ்வதா?

"ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் எதிர்காலத்தில் கல்வி எப்படி இருக்க வேண்டும்? கல்வி என்பது இனிமேல் உற்பத்தி செய்யவல்ல

உழைப்போடுதான் இருக்கும்; உடல் வளத்தையும் அது கவனிக்கும். இந்த மாதிரியான திட்டம் சமுதாயத்தின் உற்பத்தி வளத்தைப் பெருக்குவதற்காக மட்டுமல்ல, முழு வளர்ச்சியுற்ற ஆளுமையின் மலர்ச்சிக்கு அது ஒன்றுதான் வழி''—இது கார்ல் மார்க்சின் கருத்து. காந்தியடிகளின் கல்விக் கொள்கையும் இதனோடு இயைந்தே செல்லும் என்பது நாம் அறிந்ததுதான்.

இத்தகைய திட்டத்தால்தான் சமுதாயத்தையும் கல்வியையும் பிணிக்க முடியும். இதற்குச் சில தடைகள் உண்டு. தடைகளிலே இப்போதைக்கு முதன்மையானது பயிற்சி மொழித் தடை. அயல் மொழி வாயிலாக, பொருட்செலவு மிகுந்த நிலையங்களில் 'கல்வி' வழங்கப்படுவதால் 'வெள்ளை வேட்டிச் சாதி' ஒன்று உருவாகியிருக்கிறது. சமுதாயப் பெரும்பான்மைக்கு விளங்காத ஒன்றை விளங்கிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டு தலைமை ஏற்க இதுவரையில் அந்த வெள்ளை வேட்டிகளால் முடிகிறது. வயது வந்தோர் யாவருக்கும் வாக்குரிமை என்ற அளவுக்குக் குடியாட்சி நடைமுறைக்கு வந்துவிட்டது. இனி, வெள்ளை வேட்டிக் கூட்டத்தின் ஆதிக்கம் நெடுங் காலத்துக்குச் செல்லாது.

எல்லோரையும் 'ஆங்கிலேயர்'களாக ஆக்குவதும் முடியாது; இயற்கைக்கும் கல்வித் தத்துவத்துக்கும் முரணானது. இடையிலே ஆதிக்கவாதிகளின் வல்லமை சிறிது காலத்துக்கு ஆட்டம் போடும் என்பது உண்மைதான். அதைத் தான் இன்று நாம் கண்டுவருகிறோம். 'அகில உலக மனப்பான்மை'யெல்லாம் வெறும் நாடகம்.

மொழித் தடை நீங்குவதோடு கல்வியும் சமுதாயமும் நெருங்கிவிடப் போவதில்லை; அது தொடக்கம். மொழித் தடை முதலில் நீங்கவேண்டும். பிறகு பிற தடைகளை நீக்க வேண்டும்.

தடைகள் நீங்கிய பிறகுதான் 'தனி மனிதன் என்று எவனும் இல்லை' என்பதும், 'மனிதன் சமுதாயத்தின் உறுப்பே' என்பதும் தெளிவாகும். அதன் பிறகு தான் தனக்குப் பயன் படும் சமுதாயத்திற்குத் தனி மனிதனும் பயன்படுவான். அப்போது கல்வி என்பது மனிதனைச் சமுதாயத்தோடு இணைக்கும் பாலமாகும். சமுதாயம் கல்வியரங்கிலும், கல்வி சமுதாய அரங்கிலும் ஊடாடித் திளைப்பதற்கு வழி ஏற்பட்டால்தான் மனிதனின் ஆளுமை மலரும். ●

நமக்குப் பழக்கமில்லை

மாணவர்களிடையே பலர் ஒன்று சேர்ந்து வேலை செய்யும் உணர்ச்சியுண்டாகவில்லையென்றால் நம் ஆசிரியர்கள் பட்டபாடு பயன் தரவில்லையென்று கொள்ளவேண்டியதே. பலர் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்யும் பழக்கம், செய்வதில் ஆவல் ஆகியவை நமக்கு மிகவும் குறைவு. பேராபத்துக்கள் வரும் சந்தர்ப்பங்களைத் தவிர நாம் நம் வீடுகளுக்கு வெளியே எட்டிப் பார்ப்பதேயில்லை.

வினோபா பாவே.

யாருக்காகக் கல்வி?

திரு. பொ. ரங்கசாமி M. A., B. T.

"உங்கள் உள்ளத்தை மிகவும் வருத்துகின்ற பிரச்சினை யாது?" என்று காந்தியடிகளை ஒரு அயல் நாட்டுப் பத்திரிகை நிருபர் கேட்ட போது, "அது, படித்த இந்தியர்களுடைய நெஞ்சில் ஈரமில்லாமை" என்று காந்தியடிகள் பதில் அளித்தார். ஆங்கிலேயக் கலவி முறை நமக்குத் தநத பல பரிசுகளில் இது ஒன்று. ஆங்கிலேயன் சென்று விட்ட போதிலும், அவன் புகுத்திய கல்வி முறை இன்னும் மாருமல் இருக்கிறது. அவன் அன்று நமக்கு என்ன கற்றுக் கொடுத்தானே, அதையே இன்றும் கிளிப்பிள்ளை போலத் திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். "ஆங்கிலமே உயர்ந்த மொழி. ஆங்கில நாகரிகமே உயர்ந்த நாகரிகம். ஆங்கில மொழியைப் பயின்று, ஆங்கில நாகரிகத்தைப் பின்பற்றுங்கள். இகத்திலும் பரத்திலும் உங்களுக்கு நல்ல கதி கிடைக்கும்" என்று அவன் சொன்னன். என்ன மாயம் செய்தானே தெரியவில்லை அவன் சொன்னவை யெல்லாம் முழுக்க முழுக்க உண்மை என்று இன்றும் மனமார நம்புகிறவர்கள் நம்மிடையே இருக்கிருர்கள்! இதை விட அடிமைத்தனத்திற்கும் சுய சிந்தனை இன்மைக்கும் வேறு சான்று இருக்க முடியாது.

"ஆங்கிலத்தின் தரம் குறைந்து வருகிறதே! என்ன ஆகுமோ தெரியவில்லையே!" என்று அங்கலாய்க்கிருர்கள் இவர்கள். ஆங்கிலத்தின் தரம் குறைந்தால் என்ன? நம்முடைய அறிவு சூனியமாகி விடுமா? நம்முடைய முன்னேற்றமெல்லாம் அப்படியே நின்றுவிடுமா? நாம் அழிந்துபோய்விடுவோமா? அப்படியெல்லாம் ஒன்றும் நேராது. மாருக, நம்முடைய அறிவு தெளிவு பெறும். சுய சிந்தனையும் ஆராய்ச்சியும் பெருகும். தாய்மொழியில் கலையும், விஞ்ஞானமும் வளரும். வளர்ந்து நாட்டுக்குப் பயன்படும். இன்று போல் அவை ஆங்கிலம் கற்ற ஒரு சிலரிடையே மட்டும் உலவாமல் சமூகம் முழுதும் பரவிப் பயன் தரும்.

ஆங்கிலத்தை முதலாக வைத்து வியாபாரம் செய்து, சமூகத்தில தங்களுக்கு ஒரு உயர்ந்த இடத்தையும் செல்வாக்கையும் சம்பாதித்துக்கொண்ட ஒரு சிலர், ஆங்கிலம் போய்விட்டால், அதனேடு தங்கள் அந்தஸ்தும் அதிகாரமும் போய் விடும் என்று அஞ்சுகிருர்கள். அவர்கள் அஞ்சக் காரணமில்லை. தங்கள் மனப்போக்கைச் சரி செய்து கொண்டால் போதும். அவர்கள் செல்வாக்கு அப்படியே இருக்கும். ஆங்கிலத்திற்கு இதுவரை செய்து வந்த சேவையை, இனி அவர்கள் தமிழுக்குச் செய்யட்டும். ஆங்கிலத்திற்குச்செய்த சேவை, தங்களுக்கும் ஆங்கிலேயனுக்கும் செய்த சேவையாக முடிந்தது தமிழுக்குச் செய்யும் சேவை, தங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் செய்கின்ற சேவையாக முடியும். "தமிழில் போதிய நூல்கள் இல்லையே!" என்ற குறையைப் போக்க அவர்கள் முன் வரட்டும். அதை விடுத்து நூல்கள் இல்லை என்ற குறையையே காரணமாக வைத்துப் புதிய முன்னேற்றத்தை அவர்கள் தடை செய்ய வேண்டாம்.

சமீபத்தில், உலக நாடுகள் பலவற்றைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நம்மைப் போன்று ஆங்கிலப் பித்துப் பிடித்தவர்களை வேறெங்கும் நான் காணவில்லை. பாரிஸிலும், ரோமிலும், கோபன்ஹேகனிலும் ஆங்கிலம் தெரிந்தவர்களைக் கண்டுபிடிப்பதே பெரிய காரியமாக இருந்தது. அதனால் என்ன? அந்நாட்டு மக்கள் அழிந்துபோய்விட்டார்களா? அவர்களுடைய மொழிகளில் அறிவு வளரவில்லையா? அவர்கள் நாட்டில் தொழிலும் விஞ்ஞானமும் பெருகவில்லையா? அல்லது நம்மைப் போலத்தான் வேறு நாடுகளில் இருந்து தொழில் விற்பனர்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்களா?

கல்வி என்பது ஒரு கருவி. சமுதாய முன்னேற்றம் அதன் குறிக்கோள். இக்குறிக்கோளுக்கு உதவாத கல்வி, கல்வியாகாது. சமுதாய முன்னேற்றத்திற்குக் கல்வி உதவ வேண்டுமென்றால், அது சமுதாய மொழியில்தான் கற்பிக்கப்படல் வேண்டும். வேற்று மொழியில் கற்பித்தால், அம்மொழியில் கற்றவர்கள் தனிச் சாதியாகி சமூகத்திலிருந்து பிரிந்துவிடுவார்க அந்நிலையைத்தான் நாம் காண்கின்றோம். "கல் சிலருக்கு மட்டும்" என்ற ப பசலிக் கொள்கை மலையேறி டது. "சமுதாயம் முழுவதற்கு" என்ற புதுக் கொள்கை பிறந்திரு கிறது. இக்கொள்கையை எதிர்ப் வர்கள் கால வெள்ளத்திற்கு அலை போட முயல்பவர்கள். அவர்க முயற்சி வீண். அவ்வெள்ளம் அ களையும் அடித்துச் சென்றுவி இக்கொள்கையை ஆதரிப்பவர் இந்நாட்டின் புதிய தலைவர் அவர்கள் தலைமையில் புதிய சமு யம் ஒன்று உருவாகும். படித்த படிக்காதவர் என்ற பிளவு ம யும். இம்மறுமலர்ச்சிக்கு உழைக்கும் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட இந்நாட்டு இளைஞர்கள் முன் வருவார்களாக.

பாடங்கள் சுவையாய் அமைய....

மாணவர்களுக்கு அவர்களுடைய தாய்மொழியில் பாடங்களைப் போதிப்ப தான் நல்ல பலன் கிட்டுகிறது. இதர பாடங்களைப் பிரதேச மொழியில் போ தால், மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் தனிக் கவனம் செலுத்துவது சாத்தி இதன் மூலம் ஆங்கில மொழியும் அபிவிருத்தி அடைகிறது. எல்லாப் பாடங் யும், ஆங்கிலத்தில் போதிப்பதென்பது தற்போதைய வழக்கமாக இருக்கி ஆங்கில மொழிப் பாடம் போதிக்கும் பேராசிரியர்கள் அம்மொழியில் நிபுண வம் பெற்றிருப்பர். மற்றப் பாடங்களைப் போதிப்பவர்கள் ஆங்கில மொழி தீவிரமான ஞானம் இல்லாமல் இருப்பார்கள். ஆகவே, மாணவர்களுக்கும் ஐந் ஆறு விதமான வகை பாடபோதனை நடைபெறுகிறது. இதனால் எது ஆங்கில என்று தெரியாமல் திகைக்கவேண்டி இருக்கிறது. பிரதேச மொழிகளில் மாண களுக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும்போது வகுப்பில் சூழ்நிலை மாறுதல் அடைகிறது. பாடங்கள் எல்லாம் சுவையாக அமைகின்றன.

- திரு. எஸ். சத்தியமூர்

தமிழில் முடியும் :

அறிவியல் வழி

டாக்டர் பொ. திருஞானசம்பந்தம், M. A., Ph. D.

ன்றிடுவீர் எட்டுத் திக்கும்—
ச் செல்வங்கள் யாவும்
ணர்ந்திங்குச் சேர்ப்பீர் !''

து பாரதியார் வாக்கு. மண்ணு கத்தில் பல திசைகளிலு முள்ள ாடுகளில் ஆங்காங்கு விளங்கி ரும் கலைச் செல்வங்களைத் தேடிக் காண்டுவர வேண்டும். அதுமட்டு ல்ல; விண்ணகமெங்கும் உள்ள தைகளை அறிய முற்பட வேண் . இயற்கையின் கட்டுப்பாடு ாயும் மீறி அண்ட வெளிக்கும் ன்று திரும்பியுள்ளான் மனிதன். து ஒரு பெரிய காரியம். வரலாறு ணுத ஒரு புதுமை. புலவர்கள் கற்பனைத்தேர் ஊர்ந்து இத்தகைய காரியங்களைப்பற்றிப் பாடுதல் கூடும். ஆனால், இதனைச் செயற் டுத்தியவர்கள் அறிவியல் புலவர் ளும், பொறியியல் நிபுணர்களுமே நவர். அறிவியல் வளர்ச்சிப் பாதை ல் இது ஒரு சிறந்த திருப்பம். றிவியல் வழியின் சிறப்பு என்ன?

அளந்து கூறின் அறிவு பெருகும்; ழையறக் கூறின் தெளிவு பிறக் ம். இதுவே அறிவியல் வழியில் தற்பாடம். சிறந்த பாடம். ஒரு பாருளைப் பார்க்கிறோம். அப் பாருளைப்பற்றி ஆய்ந்து அறிகி றோம். நம் கண்களின் உதவியால் அப்பொருள் நமக்கு அறிமுகமா கிறது. தகுந்த கருவிகள் கொண்டு அப்பொருளின் நீளம், அகலம், உயரம், புறப்பரப்பு, பருமன், வண்ணம் முதலிய பண்புகளை அளக்கலாம்.

புத்தகத்தின் நீளத்தை அங்குலம் என்ற அலகில் அளக்கிறோம். அறையின் நீளத்தை அடி என்ற அலகு கொண்டு மதிப்பிடுகிறோம். துணியின் நீளத்தைக் கஜம் என்ற கணக்கில் கூறுகிறோம். ஒரு ஊரி லிருந்து மற்றொரு ஊருக்குள்ள தூரத்தை மைல் அல்லது கிலோ மீடர் என்ற அலகுகளைக் கொண்டு அளக்கிறோம்.

நாம் வசிக்கும் பூமியின் குறுக் களவு 7920 மைல்கள்; அதாவது 12742 கிலோ மீடர்கள். பூமியின் சுற்றளவு 24880 மைல்கள்; அதா வது 40020 கிலோ மீடர்கள்.

அறிவியல் வழியில் பூமியைப் பற்றிய அறிவு கடந்த நானூறு ஆண்டுகளாக நன்கு வளர்ந்து வருகிறது. பூமியானது அண்டம் என்றபெருங்கடலில் ஒரு சிறுபகுதி. அக்கடலில் தீவுகளாக ஆங்காங்கே பல விண்மீன்கள் ஒளி தருகின்றன. அத்தகைய விண்மீன்களுள் ஒன்றே நமக்கு வாழ்வளிக்கும் சூரியன். இச்சூரியனின் குறுக்களவு பூமியின் குறுக்களவைப்போல் 110 மடங்காகும். இதனைப் பூமியில் இருந்தவாறே அறிவியல் வழியில் அறிந்திருக்கிறோம். இந்தச் சூரிய னின் ஆட்சிக்கு உட்பட்டு இதனை வலம் வரும் வானப்பொருள்கள் பல. புதன், வெள்ளி. பூமி, செவ் வாய், வியாழன், சனி, யுரானஸ், நெப்ட்யூன், ப்ளூடோ ஆகிய ஒன்பது கோள்கள் சிறப்பானவை.

நம் நாட்டுச் சோதிட நூல்களில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி,

இராகு, கேது ஆகிய நவ கிரஹங்கள் கூறப்படுகின்றன. இவைகளுள் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய ஐந்து கோள்கள்தாம் பூமியுடன் ஒப்புநோக்கத் தக்கவை. சூரியன் ஒரு கிரஹம் அல்ல; ஒரு விண்மீன். சந்திரன் பூமியின் ஈர்ப்பிற்குட்பட்டு அதனைச் சுற்றிவரும் ஒரு திங்களாகும். இராகு, கேது என்று கூறப்படுவன எவை என்று கூறமுடிவதில்லை. ஆயினும் ஒன்று உண்மை: எல்லா வானப் பொருள்களும் பிற வானப் பொருள்களின் இயக்கங்களை மாற்ற வல்லவை.

இனி, அறிவியல் வாழ்வில் கண்டபடி ஒன்பது கோள்களைப்பற்றியும் ஒரு சிறிது கூறலாம். சூரியன் நடுவிலிருக்க, இக்கோள்களெல்லாம் இவைகளுக்கென அமைந்த தடங்களில் சுற்றிவருகின்றன சூரியனுக்கு அண்மையில் உள்ள புதன் எனும் கோள் சூரியனிடமிருந்து மூன்று லட்சத்து அறுபதினாயிரம் மைல்கள் தொலைவில் நீள் வட்டப்பாதையில் சுற்றிவருகிறது. ப்ளூடோ என்று கூறப்படும் கோள் மிகவும் சேய்மையில் நீள்வட்டப்பாதையில் சுற்றிவருகிறது. இப்பாதையானது சூரியனிடமிருந்து 367 கோடி மைல்கள் தொலைவில் அமைகிறது. எனவே, சூரியனிடமிருந்து 36,000 மைல்களுக்கு அதிகமாகவும், 367 கோடி மைல்களுக்குக் குறைவாகவும் அமையும் தடங்களில் மற்றக் கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன.

நாம் வசிக்கும் பூமியானது 9 கோடியே 2.9 லட்சம் மைல்கள் தொலைவில் சூரியனைச்சுற்றி வருகிறது. இவ்வளவு அதிகமான தொலைவில் சென்ற போதிலும் சூரியனின் ஈர்ப்புப் புலத்தைவிட்டு பூமியானது நீங்கவில்லை என்பது இயற்கையின் சிறப்பாகும். ப்ளூடோ என்ற கோள் இதைப்போன்று 40 மடங்கு தூரத்தில் சூரியனைத் தவறாது சுற்றிவருவது விந்தையன்றோ!

சந்திரன் பல ஊழிக[ள்]
முன்பாகப் பூமியின் ஒரு பகுதி
இருந்தது என்று கூறுவர். ச
னுக்கும் பூமிக்கும் இடையே உ
தூரம் 24000 மைல்கள் என்று அ
வியல் கூறுகிறது. இச் சந்திரனி
குறுக்களவு 1081 மைல்களாகு
அண்ட வெளியில் மனித
காணும் முதல் தீவாகிய சந்
மண்டலத்தின் சிறப்பும் பண்
களும் அறிவியல் வழியால் அறி
கிடக்கின்றன.

இதுவரையில் மனிதன் அண்
வெளிக்குப் பயணம்சென்று திரு
வருவதைப்பற்றிக் கனவு கண்
வந்திருக்கிறான். ஆனால், இன்றோ
ரஷ்ய நாட்டு மேதைகள் அக்கன
வை நனவாக்கி விட்டார்கள்.
கொலம்பஸ் எவ்வாறு அமெரிக்க
வைக் கண்டுபிடித்தார்; அத
பிறகு உலகில் என்னென்ன மா
தல்கள் நிகழ்ந்தன என்பதை அ
வோம். அதைப்போலவே, காகரி
என்ற வீரர் பூமியைச் சுற்
அண்ட வெளியில் அண்டத் தே
சென்று வந்திருக்கிறார். அ
கடந்த தூரம் சுமார் 26000 மை
கள் என்று கூறலாம். பூமியி
மேற்பரப்பிலிருந்து சுமார் 150 மை
உயரத்தில் பூமியைச் சுற்றி வ
திருக்கிறார். இப் பயணத்திற்
அவர் செலவு செய்த நேரம் 90 நிமி
ஷங்கள். அண்டத்தேரின் வேகமே
ஒரு மணிக்கு 17000 மைல்களுக்கு
மேற்பட்டது என்று கூறலாம்
இந்த அருஞ்செயலின் சிறப்பை
மக்கள் உன்னிப் பார்க்கவேண்டும்